Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 42

வெள்ளிக்கிழமை
07 ஜனவரி 2022

மார்கழி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16

விலை: 30/=

## அரச அலுவலர்களின் ஓய்வு வயது 65!

சுற்றறிக்கை வெளியானது

கொழும்பு, ஜன. 7
அரச ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரித்து, சுற்றறிக்கை 15

# இந்தியப் பிரதமருக்கு அனுப்பவுள்ள ஆவணத்தில் வடக்கு- கிழக்கு தமிழ்க் கட்சிகளே ஒப்பம்!

## மனோ, ஹக்கீம், ரிஷாத் கட்சிகள் இன்னும் கைச்சாத்திடவில்லை

கொழும்பு, ஜனவரி 7

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் ஒப்படைப்பதற்காகத் தமிழ்பேசும் தரப்புக்களின் பொதுநிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆவணத்தில் வடக்கு- கிழக்கு தமிழ்க் கட்சிகள் மாத்திரம் நேற்று ஒப்பமிட்டன. மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினர் குறித்த ஆவணத்தில் கையொப்பமிட மறுத்துவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. 15

## மோடிக்கான கடிதம் தமிழீழத்துக்கான வரைவாம்!

கொழும்பு, ஜன. 7
"மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளைத் தவிர்த்து வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் மாத்திரம் கையொப்பமிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஆவணம் அனுப்பப்படுமாக இருந்தால் அது 15

## வடமராட்சியில் மண்டபத்தில் தீ!

யாழ்ப்பாணம், ஜன. 7
வடமராட்சி, துன்னாலையிலுள்ள ஒரு மண்டபத்தில் மின் ஒழுக்குக் காரணமாக நேற்று முற்பகல் தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று 15

## வெலிக்கடை- சிறைப் படுகொலை தீர்ப்பு 12ஆம் திகதி

கொழும்பு, ஜன. 7
2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் 15



### முச்சந்தி முரளி

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் எண்டு இலங்கையின்ர இப்பத்த நிலை பற்றி வள்ளுவர் அப்பவே சொல்லிட்டார் பாருங்கோ..."

ஆரிய குளத்தில் மதச்சின்னத்தை திணித்தால்

## இறந்தோரின் அஸ்தி கரைக்கும் நீர்நிலையாக மாற்றிவிடுவோம்!

வடக்கு ஆளுநருக்கு சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 7
யாழ்ப்பாணம், ஆரியகுளத்தில் மதச் சின்னங்களை திணிப்பதற்கு அரசு முனைந்தால் அதை, இறந்தவர்களின் அஸ்தி கரைக்கும் புனித 15

பூநகரி பிரதேசசபையில்

## 2022 க்கான பாதீடு நிறைவேற்றம்

பூநகரி, ஜன. 7
பூநகரி பிரதேசசபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் 9 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது. சபையின் அமர்வு, 06

## அரிசி விலை 300 ஆக உயரும்!

கொழும்பு, ஜன. 7
சித்திரைப் புத்தாண்டு காலத்தில் ஒரு கிலோகிராம் அரிசியின் விலை 300 ரூபா வரை உயர்வடையும் சாத் 15



## மன்னாரில் எரிவாயு வெடித்து எரிந்து சாம்பரானது குடிசை!

- மயங்கிய பெண் மருத்துவமனையில்
- கிளிநொச்சியிலும் வெடிப்பு

மன்னார், ஜன. 7
மன்னார் தரவான்கோட்டை பகுதி குடிசை ஒன்றில் நேற்றும தியம் எரிவாயு வெடித்ததால், அந்தக் குடிசை எரிந்து சாம்பரானது. அதனால் ஏற்பட்ட 06

## வவுனியாவில் வீடுபுகுந்து கத்திமுனையில் கொள்ளை!

நேற்றுமுன்தினம் நள்ளிரவு சம்பவம்

வவுனியா, ஜன. 7
வவுனியா, புதுக்குளம் தேவகுளம் பகுதியில் வீடு புகுந்த சுமார் 10 பேர் கொண்ட கொள்ளைக்கும்பல், கத்திமுனையில் வீட்டிலுள்ளவர்களை அச்சுறுத்தி, அவர்கள் அணிந்திருந்த 8 பவுண் தங்க நகைகளையும் 11 ஆயிரம் ரூபா பணத் 06

## கைக்குண்டு மீட்பு



யாழ்ப்பாணம், ஜன. 7
கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையிலுள்ள வீடொன்றின் கூரைக்குள்ளிருந்து நேற்று கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. மழை ஒழுக்குக் காணப்படுவதால், 06

## 'பூஸ்டர்' ஏற்ற அச்சம் – பெற்றோர் அச்சம் தேவையில்லை – பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜன. 7
பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றவுள்ள கொரோனாத் தடுப்பூசியின் காலாவதித் திகதி 10ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாகக் கூறப்படும் நிலையில், அது தொடர்பில் பெற்றோர் அச்சம் வெளியிடும் 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்காவின் நிலையே இலங்கையிலும் ஏற்படும்!

## ஏப்ரலில் பஞ்சம் உறுதி எச்சரிக்கின்றது எதிரணி



**கொழும்பு, ஜன. 7**

**பணவீக்கம் அதிகரிக்கப்பட்டு, ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்ட அபாய நிலைமையே இலங்கையிலும் உருவாகவுள்ளது என்று, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களுக்கு இம்முறை வழங்குவதற்கு ஒன்றுமில்லை, மாறாக மக்களிடமிருந்தே எதையாவது பெற வேண்டும் என வரவு- செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கு முன்னர், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச கருத்து வெளியிட்டிருந்தார். எனினும், பாதீடு நிறைவேற்றப்பட்டு ஒரு மாதம்கூடக் கடக்காத நிலையில் 229 பில்லியன் ரூபாவுக்கு நிவாரணத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு பொருளாதாரம் பாதிக்கப்பட்டு, மக்களின் வாழ்க்கைச்சுமை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறு நிவாரணம் வழங்கப்படுவது சிறப்பான விடயம் என சிலர் கருதலாம். ஆனால், நிவாரணம் வழங்குவதற்கான வருமான வழிமுறை என்னவென்று கேள்வி எழுப்பினால் அதற்கான உரிய பதில் நிதி அமைச்சரிடம் இல்லை. வருமான வழிமுறைகள் இன்றி, செலவினங்கள் அதிகரிக்கப்படுமானால், பணத்தை அச்சிட்டு, அதனை வழங்கவேண்டிய நிலைமை மத்திய வங்கிக்கு ஏற்படும்.

மத்திய வங்கி பணம் அச்சிட்டு, மக்களுக்கு நிவாரணம் வழங்குவது சரியா? வருமானம் இன்றி, பணத்தை அச்சிட்டு நிவாரணம் வழங்கினால் பணவீக்கம்தான் அதிகரிக்கும். பணவீக்கம் அதிகரித்தால் பொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும். எனவே, பொருள்களை வாங்குவதற்கு 5 ஆயிரம் ரூபா போதுமானதாக இருக்காது.

எனவே, எதிர்காலத்தில் ஆபிரிக்க நாடுகளைப்போல பொருள்களை வாங்க, 'வில்பரோக்களில்தான்' பணம் கொண்டுசெல்ல வேண்டி வரும். பணவீக்கம் அதிகரிக்காது, பணம் அச்சிடப்படாது என்றால், வருமான வழிமுறைகள் என்ன வென்பதை நிதி அமைச்சர் அறிவிக்கவேண்டும்.

அதேவேளை, பணவீக்கம் வந்தாலும் பரவாயில்லை, நாட்டுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை என நினைத்து, ஏப்ரலில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் நோக்கிலா 5 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்ற கேள்வியும் எழுகின்றது.

பணம் அச்சிடப்படுவதால் பொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும். எனவே, ஐந்தாயிரம் ரூபா கிடைக்காதவர்களுக்கான தீர்வு என்ன? ஏப்ரலில் பஞ்சம் வரும். மருந்து பொருள்களுக்குகூட தட்டுப்பாடு ஏற்படும். அமைச்சரவையை மாற்றுவதால் இப்பிரச்சினைகள் தீரப்போவதில்லை' - என்றார். (ம-44)

## வாகனங்களை விற்று வருவாய் ஈட்ட முயற்சி

கொழும்பு, ஜன.7

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டு, சுங்கத் திணைக்களத்தின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களை விடுவித்து, அதனூடாக இலாபம் ஈட்டுவது தொடர்பில் அந்த திணைக்களம் அவதானம் செலுத்தியுள்ளது.

அவ்வாறான வாகனங்களை, தண்டப்பணம் மற்றும் வரி ஆகியவற்றை அறவிட்ட பின்னர் விடுவிப்பதனூடாக வருமானம் ஈட்டுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.வி. ரவிப் பிரிய தெரிவித்துள்ளார்.

சுங்கத் திணைக்களத்தின் பொறுப்பில், சட்ட திட்டங்களை மீறி, இறக்குமதி செய்யப்பட்ட 262 வாகனங்கள் உள்ளன என்றும், அவற்றை இந்த மாதம் முடிவதற்குள் தண்டப்பணம் மற்றும் வரி ஆகியவற்றை அறவிட்டுக்கொண்ட பின்னர் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச, வரவு-செலவுத்திட்டத்தை முன்வைத்து, இந்த வாகனங்களை விடுவிப்பதன் ஊடாக அரசுக்கு 400 கோடி ரூபா மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் பிரேரித்திருந்தார் என்றும் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

## மனைவியின் ஆசையை நிறைவேற்ற நகை அபகரித்தவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், ஜன.7

நகைகளைக்கொள்ளை அடித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தனது மனைவியை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் நகைகளை கொள்ளை அடித்ததை ஒப்புக்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொள்ளைச் சம்பவம் ஒரு மாதத்துக்கு முன்னர் நடந்துள்ளது. நெடுங்கேணிப் பிரதேச வீடு ஒன்றில் பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்த பெண்ணிடம் சந்தேகநபர் குடிப்பதற்கு குடி தண்ணீர் கேட்டுள்ளார். அந்தப் பெண் தண்ணீர் வழங்கியபோது, பெண் அணிந்திருந்த இரண்டரைப் பவுண் தங்க நகையை கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் விசாரணை நடவடிக்கை மேற்கொண்ட வவுனியாப்பிரிவு குற்ற விசாரணை பிரிவினர் சந்தேகநபரை யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்துள்ளனர். சந்தேகநபர் யாழ்ப்பாணம், கோண்டாவிலைச் சேர்ந்த 30 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் திருமணம் செய்துள்ளார். நிரந்தர வருமானம் இல்லாது திண்டாடிய இவர், தனது மனைவியின் ஆசையை நிறைவேற்றுவதற்காக தங்க நகைளைக் கொள்ளையடித்துள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவர் வேறிடங்களிலும்கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## மாயமான சிறுவர்கள் மீட்பு

கொழும்பு, ஜன.7

கொட்டதெனியாவ பகுதியில் வசிக்கும் இரு சிறுவர்கள் காணாமற் போயிருந்த நிலையில், அவர்கள் மீரிகம பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

10 மற்றும் 12 வயதுடைய இரண்டு சிறுவர்களை கடந்த நவம்பர் மாதம் காணவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அதற்கமைய பொலிஸார் முன்னெடுத்திருந்த விசாரணைகளுக்கு அமைவாக குறித்த சிறுவர்கள் இருவரும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (எ-இ)

# சட்டத்தின் பிரகாரமே கடையை அகற்றினோம்

## பிரதேசசபை விளக்கம்

கிளிநொச்சி, ஜன.7

பிரதேசசபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரமே கடை அகற்றப்பட்டுள்ளது என்று கரைச்சி பிரதேசசபை விளக்கமளித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி உதயன் பத்திரிகையில், 'நிலுவையில் வழக்கு, கடை அகற்றப்பட்டது' எனும் தலைப்புடைய செய்தி தொடர்பில் பிரதேசசபை மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 3 வருடங்களாக அனுமதியற்ற வகையில், வருடாந்தம் சபையால் வழங்கப்படும் குத்தகைதாரருக்கு எதிராக, சட்டவிரோதமாக பிறிதொரு கடையை குறித்தநபர் நடத்தி வந்துள்ளார். குறித்தகடையை சபை அகற்ற முற்பட்டவேளை, அந்தநபர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றை நாடியிருந்தார். வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் கடையை அகற்றுவதற்கு நீதிமன்றில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இது தவிரவும், சபையால் 2022 ஆம் ஆண்டுக்காக குத்தகைதாரராகத் தெரிவுசெய்யப்பட்ட குத்தகைதாரர் குறித்த கடை அகற்றப்பட்டால்தான், தன்னால் சபையில் கேள்வி கோரல் நடைமுறைகளைப் பின்பற்றமுடியும் என்று தெரிவித்திருந்தார். அதற்கமைவாக 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச் சட்டத்தின்பிரிவு 52இன் பிரகாரம் குறித்த கடை அகற்றப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஓ-4-இ)

# டொலரை ஒருபோதும் அச்சடிக்க முடியாது!

## பஸிலுக்கு மைத்திரி குட்டு

கொழும்பு, ஜன. 7

ரூபாவை எவ்வளவு வேண்டுமென்றாலும் உங்களால் அச்சடிக்க முடியும். ஆனால், டொலரை உங்களால் அச்சடிக்க முடியாது என்று தெரிவித்தார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச பியகமவிலுள்ள தொழிற்சாலையொன்றில் பணம் அச்சடித்து வருகின்றார். தேவையான அளவுக்கு ரூபாவை அச்சடிக்க முடியும். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை தற்போது வேறு பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது. தற்போதைய அரசாங்கத்தின் முறையான முகாமைத்துவம் இன்மையே இதற்கான பிரதான காரணம் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆண்டில் இலங்கை திவாலாகும் அபாயமுண்டு

கொழும்பு, ஜன. 7

**2022ஆம் ஆண்டில் இலங்கை திவாலாகும் அபாயம் உள்ளது - என்று பிரித்தானிய பத்திரிகையான த கார்டியன் தெரிவித்துள்ளது.**

அந்நியச் செலாவணி கையிருப்பு வறண்டு கிடப்பதாலும், வரலாறு காணாத பணவீக்கம் காரணமாகவும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. நான்கு இலங்கையர்களில் ஒருவர் கூடியவிரைவில் நாட்டை விட்டு வெளியேறத் தயாராகி வருகின்றார்கள், இலங்கையிலுள்ள பெரும்பான்மையான குடும்பங்கள் தமது வருமானத்துக்கான அடிப் படைத் தேவைகளைக்கூட முழுமை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# விளம்பரப்பலகை நட்டும் அபிவிருத்தி நடக்கவில்லை

## மக்கள் விசனம்

சாவகச்சேரி, ஜன.7

வீதி அபிவிருத்தி செய்வதற்கான விளம்பரப் பலகை நடுகை செய்யப்பட்டு ஒரு மாதமாகியும் இது வரை ஆரம்பக்கட்ட புனரமைப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று கொடிகாமம் - கோயிலாமனை மக்கள் தெரிவித்தனர்.

ஏ-9 வீதியிலிருந்து கோயிலாமனை ஊடாக மந்துவில் பாடசாலை வரையான வீதிகள் தார்க்கலவை வீதியாக புனரமைக்கப்படவுள்ளன வென்று குறிப்பிட்டு, ஒரு மாதத்துக்கு முன்னர் விளம்பரப் பலகை நடப்பட்டது. ஆனால், இதுவரை புனரமைப்புக்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஒ-ரி1-9)

# பால்மாவுக்கு தட்டுப்பாடு இந்த மாதமும் தொடரும்

கொழும்பு.ஜன.7

சந்தையில் நிலவும் பால்மாவுக்கான தட்டுப்பாடு இந்தமாதம் இறுதி வரை தொடரும் என்று பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சங்கத்தின் பேச்சாளர் அஷோக பண்டார தெரிவிக்கையில்;

டொலர் தட்டுப்பாடு காரணமாக கடந்த 31 ஆம் திகதி முதல் பால்மா விலையை அதிகரிப்பதற்கு இறக்குமதியாளர்கள் தீர்மானித்தனர். அதற்கமைவாக இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மா பொதியின் விலை 150 ரூபாவாலும், 400 கிராம் பால்மா பொதியின் விலை 60 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டன.

இந்த மாத இறுதியிலோ அல்லது பெப்ரவரி மாதத்தின் முற்பகுதியிலோ பால்மா ஏற்றிய கப்பல்கள் இலங்கைக்கு வரும். அதன்பின்னரே தட்டுப்பாடு நீங்கும்-என்றார். (ஒ-4-இ)

# 50,000 பட்டதாரிகள் அரச சேவைக்குள்!

50ஆயிரம் பட்டதாரிகள், கடந்த மூன்றாம் திகதியில் இருந்து அரச சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர் என்று உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 3ஆம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில் அரச சேவைக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். இதன்படி, சுமார் 50 ஆயிரம் பேருக்கு அரச சேவையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இந்த நிரந்தர நியமனத்துடன் அவர்களது வேதனம் 31 ஆயிரத்து 490ஆக உயர்த்தப்படுவதுடன் ஏனைய கொடுப்பனவுகளுடன் அவர்களுக்கு மாதாந்தம் 41 ஆயிரத்து 490ரூபா வழங்கப்படும் - என்றார். (ம)

# படுக்கை நோயாளிகளுக்கு வீடுகளில் நேரடிச் சிகிச்சை



யாழ்ப்பாணம்,ஜன.7

படுக்கையிலுள்ள நோயாளிகளின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று, சிகிச்சை வழங்கும் செயற்றிட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் இந்தச் சிகிச்சை முறை ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் எப்போது ஆரம்பமாகும் என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், வீட்டில் தங்கியிருக்கும் நாள்பட்ட நோயாளிகள் மற்றும் படுக்கை நோயாளிகளுக்கு உரிய சிகிச்சைகள் விரைவில் வழங்கப்படும். அதற்கான மருத்துவர் குழு தயார்படுத்தப்பட்டு வருகின்றது. ஆகவே விரைவில் இந்தச் சிகிச்சை முறைமை ஆரம்பமாகும்-என்றார்.(ஒ-4-125)

# தேங்காய் பறித்தவரை கொட்டின குளவிகள்

சாவகச்சேரி,ஜன.7

தேங்காய் பிடுங்கியவரை, கருங்குளவிகள் துரத்தித் துரத்தி கொட்டின. இந்தச் சம்பவம் கெற்பேலி மேற்கில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர், அயலிலுள்ள தென்னந்தோட்டத்தில், தேங்காய் பறிக்கச் சென்றுள்ளார். கொக்கைத்தடி தென்னோலையில் தட்டுப்பட்டதால் அதிலிருந்த கருங்குளவிகள் அவரைத் துரத்திக் கொட்டின. பாதிக்கப்பட்ட அவர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-4-இ)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடி பாதையுடன் 180 பரப்புக் காணி 1 1/2, பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (மேட்டுநிலம், நிலபரப்பு, நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 km தூரம்)
ஒரு பரப்பின் விலை 4 லட்சம்.

தொடர்பு: 077 911 6983, 077 658 5999, 077 288 0152, 077 623 4204

(CS 977)1-6



## பக்கவடிவமைப்பாளர்




பக்கவடிவமைப்புத் துறையில் அனுபவம் அல்லது ஆர்வம் கொண்ட ஆண்கள்
(இரவுக்கடமை)
**உடனடியாகத் தேவை.**

விண்ணப்பிக்க வேண்டிய மின்னஞ்சல்
editor@uthayan.com


# மோசடிக்காரர்களால் நாட்டை மாற்ற முடியாது

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு.ஜன.7

மோசடிக்காரர்களாலோ, தற்பெருமைக்காரர்களாலோ இந்த நாட்டை மாற்றியமைக்க முடியாது. அரசு மீது வெறுப்பிலுள்ள மக்கள் மாற்று வழிகளைகளையே எதிர்பார்க்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கிண்ணியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களுக்குச் சேவை செய்யும் வேறு எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது சக்தியோ இல்லை. அரசியலுக்குப் பதிலாக தேச சேவையைத் தெரிவு செய்த ஒரேயொரு அரசியல் இயக்கம் ஐக்கிய மக்கள் சக்தியே. ஐக்கிய மக்கள் சக்தி ஒன்றே நாட்டிலுள்ள ஒரே மாற்றுச்சக்தி.

பாதகத்தைவிடுத்து, நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் செயற்படுவதே எமது நிகழ்ச்சி நிரலாகும். சர்வதேச உறவுகளில் கூட நாடே முதன்மையானது.- என்றார். (ஒ-4-இ)


## அகரம் உயர் நிலைக் கல்லூரி

**AHARAM HIGH STANDARD COLLEGE**

காங்கேயன் துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

புதிய கல்வியாண்டு ஆரம்பம் - 2022
09.01.2022
ஞாயிற்றுக்கிழமை

தரம் 06 - O/L வரையான
[தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.]

நேரம்
தரம் 9, 8, 7 - மதியம் 1.00
தரம் 10,11 - காலை 6.20

ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கு மட்டும் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

குறிப்பு: இதுவரை காலமும் ஆங்கில மொழிமூல வகுப்புக்களிற்கு 35 மாணவர்களிற்கு மட்டுமே அனுமதிகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் இருந்து 50 மாணவர்கள் வரை உள்ளீர்க்கப்படுகின்றனர்.

ஆங்கில மொழி மூலமான போதனைப்பாடங்கள்
தரம் 6-9 வரையான வகுப்புகளிற்கு - கணிதம், விஞ்ஞானம், புவியியல், குடியுரிமை, சுகாதாரம், தகவல் தொழினுட்பம்,
தரம் 10-11 வரையான வகுப்புகளிற்கு - கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழினுட்பம், வர்த்தகம், ஆங்கில இலக்கியம்
தரம் 06-11 வரையான பொதுப்பாடங்கள்
தமிழ், ஆங்கிலம் (தரம் 11 இற்கு மட்டும் சைவ சமயம் நடைபெறும்)

"அகரம் எம்தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில்சேவையை விற்க முயன்றால் போராட்டம்

## ரயில்சேவை ஊழியர்கள் எச்சரிக்கை

**கொழும்பு, ஜன.7**

**இலங்கை ரயில் சேவையை தனியார்துறைக்கு விற்க அரசாங்கம் முயற்சித்தால் பெரும் தொழிற்சங்க நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும் என்று ரயில் சேவை ஊழியர்கள் எச்சரித்துள்ளனர்.**

ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான பெறுமதியான காணிகளை அமெரிக்க டொலரைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அரசாங்கம் விற்பனை செய்ய முயற்சிக்கின்றது என்று சேவைகள் தொழிற்சங்க கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த ரயில் சேவைகள் தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி.விதானகே தெரிவித்ததாவது:

ரயில் சேவையை மறுசீரமைத்து தனியார் நிறுவனத்துக்கு விற்க எந்தப் பிரிவையும் அனுமதிக்கமாட்டோம். இதற்கு முன்னரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், தொழிற்சங்கங்கள் உறுதியாக நின்று இலங்கை ரயில் சேவை தனியார்மயமாக்கப்படுவதைத் தடுத்தன.

இந்த நடவடிக்கை தொடர்பில் ஏனைய தொழிற்சங்கங்களுக்கு விளக்கமளிக்கவுள்ளோம். அரசின் முயற்சிகளை மட்டுமல்ல அரசைத் தோற்கடிக்கவும் தயங்கமாட்டோம் - என்றார். (எ-இ)

---

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.7

திருமறைக் கலாமன்றம் நடத்தி வருகின்ற 6 மாத நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தை தரம் 11,12,13 இல் பயிலும் மாணவர்களும் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

கற்கைநெறிக்கான வகுப்புகள் சனி,ஞாயிறு தினங்களில் பி.ப.3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை நடைபெறும். அத்துடன் விடுமுறை தினங்களில் முழுநாள் நாடகப் பட்டறையும் இடம்பெறும்.

கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்று முழுமை செய்து எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவித்துள்ளனர். (ஒ-ரி1)

---

## அருணாசலம் நினைவுப்பரவல்

கொழும்பு.ஜன.7

கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் சேர் பொன்.அருணாசலம் நினைவுப்பரவல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.45 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், "தமிழருக்கெதிரான நம்பிக்கைத் துரோகத்தின் நூற்றாண்டு 1921 - 2021" எனும் தலைப்பில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் நுண்கலைக்குழுச் செயலாளர் தெ.மதுசூதனன் சிறப்புரையாற்றுவார். (ஒ-4-இ)

---

### திருகோணமலை எண்ணெய்தாங்கி வளாகம்

## நீதிமன்றை நாடுவதற்கு குணவன்சதேரர் திட்டம்

கொழும்பு, ஜன. 7

திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகம் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள ஒப்பந்தம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடவுள்ளதாக எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகம் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள ஒப்பந்தம் நாட்டுக்குப் பாதகமானது. எனவே இந்த ஒப்பந்தம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடவுள்ளேன். பல தரப்புகள் இந்த ஒப்பந்தம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடவுள்ளன - என்றார்.

திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகம் தொடர்பான உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதால், ஒரு வாரத்துக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என நம்புகின்றேன் என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில இந்த வாரத்தின் தொடக்கத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

---



## உதவிகள் வழங்கல்


சாவகச்சேரி, ஜன.7

கொடிகாமம் - தவசிக்குளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவத்தினரால் உதவிகள் வழங்கப்பட்டன.

52ஆவது காலாட் படைப்பிரிவின் கீழ் உள்ள 522 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் , உணவுப் பொதிகள், குடிதண்ணீர் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பன வழங்கப்பட்டன.

அத்துடன், 10ஆவது களப்பொறியியலாளர் படையணியின் ஏற்பாட்டில், அந்தப் பிரதேசத்தில் தேங்கியுள்ள மழைநீரை வடிந்தோடச் செய்யும் வகையில் கால்வாய்களை மீளப்புனரமைக்கும் பணி, கடந்த 2ஆம் 3ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டது. (ஒ-ரி1)

---



இலங்கை கிரிக்கெட் சபையால், அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயத்துக்கு கிரிக்கெட் வலை பயிற்சிக்கூடம் வழங்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலையில் கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்துவதற்கான ஒரு ஊக்குவிப்பாக இந்த கிரிக்கெட் வலை பயிற்சிக்கூடம் வழங்கப்பட்டது. (ஒ-ரி1-9)

---



## நூல் வெளியீடு

வவுனியா மாவட்டச் செயலகமும், மாவட்ட கலாசார அதிகார சபையும் இணைந்து ஏற்பாடு செய்த "சுகந்தம்1" என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு, வவுனியா மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில், மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் நூலை வெளியிட்டுவைக்க, நூலின் முதற்பிரதியை, முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட மாவட்டச் செயலர் பி.ஏ.சரத்சந்திர பெற்றுக்கொண்டார்.

நூல் வெளியீட்டுரையை நூலாசிரியர் நா.பார்த்தீபனும் ஆய்வுரையை அபிவிருத்தி உத்தியோகத்தர் சந்திராதி ராஜேஸ்வரனும் நிகழ்த்தினர்.மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதேச செயலர்களான நா.கமலதாசன், இ.பிரதாபன், உதவிப் பிரதேச செயலர் தர்மேந்திரா, தமிழருவி சிவகுமாரன், தமிழ்மணி அகளங்கன், மேழிக்குமரன், உதவி மாவட்டச் செயலர் ம.சபர்ஜா, சமூக ஆர்வலர்கள், இலக்கியத்துறை சார்ந்தோர், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-ரி1-110)

---

# அரசை விமர்சிப்பதைத் தடுக்கமுயலக்கூடாது

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை பயன்படுத்தப்பட வேண்டுமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது அனைத்துத் தரப்பினரும் ஒரு குறிப்பிட்ட அரசியல்வாதிகளைச் சார்ந்து இருப்பதிலிருந்து விலகி, நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். 2005 ஆம் ஆண்டு முதல் சில அரசியல்வாதிகளைச் சுற்றி குழுக்கள் அணிதிரள ஆரம்பித்தன. அதன் விளைவாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி புறக்கணிக்கப்பட்டது. கட்சியைப் புறக்கணித்து குறிப்பிட்ட சில நபர்களைச் சுற்றி அணி திரண்டவர்கள் இன்று தோற்றுப்போய் கட்சிக்குத் திரும்ப விரும்புகின்றனர்.

அவர்கள் கட்சியில் இணைவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அனுமதிக்கும். ஆனால் கட்சி வெறும் தனிநபர்களைச் சுற்றி அணிதிரளாது என்றும் கொள்கைகளின் அடிப்படையில் கட்டப்பட்டது என்றும் அவர்களுக்கு கற்பிக்கப்படவேண்டும்.

உரப்பிரச்சினை, ஆசிரியர் சம்பளப் பிரச்சினை, கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகப் பிரச்சினை போன்ற பிரச்சினைகள் தலைதூக்கி, பொருள்களின் விலைகள் மிக அதிகம் என மக்கள் பேச ஆரம்பித்தபோது, நாடாளுமன்றக் குழுவிலுள்ள 14 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் மூன்று மணி நேரம் கலந்துரையாடினோம். உரம் தொடர்பான நிலைமை மற்றும் பயிர்கள் எவ்வாறு அழிக்கப்பட்டன என்பது குறித்து ஜனாதிபதியிடம் விளக்கினோம். ஆயினும் எமது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட் டன- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுசிலின் எம்.பி. பதவியும் பறிபோகும் அபாயம்!

**கொழும்பு, ஜன.7**

**முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கை தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல்பீடக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**



சுசில் பிரேமஜயந்தவுக்கு எதிராக எடுக்கப்படவுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக அரசியல்பீடக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசியல்பீடக் கூட்டத்தின் திகதி இதுவரை தீர்மானிக்கப்பட வில்லை எனவும், அவரது கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டால், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிக்கப்படும் எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## சம்பள முரண்பாடு பற்றிய வர்த்தமானி வெளியானது!

கொழும்பு, ஜன.7

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. பொதுச் சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்கின்றது.

இந்த வர்த்தமானி 2022ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும், தேசிய சம்பளக்குழு மற்றும் நிதி அமைச்சு என்பன ஒப்புதல் அளித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பில் கடந்த ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி மற்றும் இந்த வருடம் ஜனவரி மாதம் 3ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (எ-இ)

## போதனா மருத்துவமனையில் பெண்ணின் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.7

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற வந்த வயோதிபப் பெண் ஒருவரின் 3 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. வயோதிபப் பெண் "எக்ஸ்ரே" எடுப்பதற்காக சென்றபோது , தான் அணிந்திருந்த தங்கச் சங்கிலி மற்றும் காப்பு ஆகியவற்றைக் கழற்றி, தனது கைப்பைக்குள் (ஹாண்ட் பாக்) வைத்துச் சென்றுள்ளார். திரும்பி வந்து கைப்பையைப் பார்த்த போது , அதனுள் இருந்த நகைகள் களவாடப்பட்டு இருந்ததை அவதானித்துள்ளார்.

இது தொடர்பில் மருத்துவமனை நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளார். அதன் பின்னர் நிர்வாகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய மருத்துவமனைப் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு வருவோர் நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைக் கொண்டு வருவதைத் தவிர்க்கவேண்டும் என்று மருத்துவமனை நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. (எ-20)

## மீண்டும் மின்வெட்டு!

கொழும்பு, ஜன. 7

எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் நாட்டில் மீண்டும் மின்வெட்டு ஏற்படக் கூடும் என இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபை கூட்டு தொழிற்சங்கக் கூட்டமைப்பின் அழைப்பாளர் ரஞ்சன் ஜயலால் மேலும் தெரிவித்ததாவது:

டீசல் தட்டுப்பாடு காரணமாக சபுகஸ்கந்த அனல் மின் நிலையமும் மூடப்பட்டுள்ளது. எரிபொருள் நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் மின்வெட்டு ஏற்படக்கூடும். சபுகஸ்கந்த மின்நிலையத்தின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், தேசிய மின் கட்டமைப்பில் 160 மெகாவாட்ஸ் மின்சாரத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது - என்றார். (ம)

## கட்டாயமாகின்றது தடுப்பூசி அட்டை!

### பணிகள் இறுதிக்கட்டம்

கொழும்பு, ஜன. 7




பொது இடங்களுக்குச் செல்வோர் கொரோனாத் தடுப்பூசி அட்டைகளை கட்டாயம் வைத்திருக்கவேண்டும் என்பது தொடர்பான சட்டத் தயாரிப்புப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், பூஸ்டர் தடுப்பூசியை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும். இரண்டாவது தடுப்பூசியை செலுத்திய பின்னர் 3 மாதங்களில் மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். பூஸ்டர் தடுப்பூசி செலுத்தல் மூலம் பல்வேறுப்பட்ட நோய் அறிகுறிகள் ஏற்படுவதாக வெளியான தகவல்கள் இதுவரை விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)




**பைசர் ஊசியால இப்ப ஒரு சிக்கல். அந்த ஊசி கவனமா , கடுங்குளிரில வைச்சிருந்தால் தான் கனநாளைக்கு இருக்கும். மைனஸ் 70 பாகை செல்சியஸில வைச்சிருக்கோனும். ஒவ்வொரு ஏரியாவுக்கும் பிரிச்சு அனுப்பி வைக்கேக்க அங்க இப்பிடி மைனஸ் 70 பாகை செல்சியஸில வைச்சிருக்கிற அளவுக்கு கருவியள் இல்லை. அதால வெறும் மைனஸ் 2 பாகை செல்சியஸுக்குத்தான் இஞ்ச அதைப் பாதுகாத்து வைக்கமுடியுமெண்டதால, ஒரு மாதம் மட்டும் தான் ஊசி நல்லதா இருக்கும். அதுக்குப் பிறகு அதை அழிக்க வேண்டியதுதான்.**

**கொரோனாவுக்கு பயத்தில முதல் ரண்டு தடுப்பூசியையும், விழுந்தடிச்சுப் போய் போட்ட சனம் மூண்டாவதாப் போடுற பூஸ்டர் ஊசியை அவ்வளவு அக்கறையாப் போடேலை. ஆக, 25 தொடக்கம் 30 வீதமான ஆக்கள்தான் வடக்கில பூஸ்டர் போட்டிருக்கினம். ஆனால் எல்லாருக்கும் கணக்குப் பார்த்து எடுத்துக்கொண்டுவந்த பைசர் ஊசி, இன்னும் நாலைஞ்சு நாள்தான் நல்லதா இருக்கும். .பிறகு டிஸ்போஸ் பண்ணவேண்டியதுதான். அப்பிடிச் செய்தால் பெரும் இழப்பு. ஊசியும் லேசில எடுக்க ஏலாது, காசும் கரியாப் போடும். அதாலதான் சுகாதாரத்துறை ஒரு முடிவெடுத்து, பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு ரண்டாவது டோஸா மிச்சமிருக்கிற இந்த பைஸரைப் போடுங்கோ எண்டு அறிவிச்சிருக்கு. வெள்ளியும், சனியும் பள்ளிக்கூடங்களில பைஸரைப் போடச் சொல்லி அவசர அறிவிப்பு பறந்திருக்கு.**

**இந்த அறிவிப்பால பெற்றாருக்குத்தான் கெடில் கலக்கம். இந்தப் பைஸரின்ர ஆயுள் காலம் இன்னும் நாலைஞ்சு நாள்தான். இப்பிடி அரும்பொட்டில் ஊசியைப் போட்டால், எங்கட பிள்ளையளுக்கு ஏதும் நடந்திடுமோ எண்ட பயம்தான் இதுக்கு காரணம். ஏனெண்டால், இன்னும் கொரோனாவைப் பற்றியோ , இல்லாட்டி தடுப்பூசியளைப் பற்றியோ ஒரு திட்டவட்டமான முடிவு ஆருக்கும் தெரியாது. எல்லாம் ஒரு ஆராய்ச்சி நிலையிலதான் இருக்கு. இப்பிடிப்பட்ட நிலையில, காலாவதித்திகதிக்கு கிட்ட, அதுவும் மிஞ்சிப் போட்டுதே எண்ட ஒரு காரணத்துக்காக பைஸர் ஊசியை பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு போட வெளிக்கிட்டால் , பெத்த தாய், தகப்பனுக்கு பயம் வரத்தானே செய்யும். ஆனால் அப்பிடி பயப்பிடாமல் பைஸரைப் போடுங்கோ எண்டு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் உறுதியாச் சொல்லுறார். எங்கட பிள்ளையளுக்கு தீங்கு வாறமாதிரி ஒரு முடிவை அவர் எடுக்க மாட்டார். அதால நம்பிப் போடலாம். ஆனாலும் இனிமேல் , இப்பிடி மிஞ்சின பைஸரைப் போடாமல், பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு தனிய எடுத்துக் கொண்டுவந்து போட்டால், எல்லாரும் பயப்பிடாமல் போடவருவினமெல்லோ?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயவிலையில் கட்டடப்பொருள்கள் தீவகமக்களின் குறை தீர்க்கப்பட்டது!

## வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜன. 7**

**தீவகத்தில் இனிவரும் காலத்தில் கட்டடப் பொருள்களை நியாயமான விலையில் கொள்வனவுசெய்ய முடியும். அதிக பணத்தைச் செலவிட்டே கட்டடப்பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டியுள்ளது என்ற தீவகமக்களின் குறை, கூட்டுறவுத் திணைக்களத்தால் தீர்க்கப்பட்டுள்ளது.**

இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண கூட்டுறவு ஆணையாளர் மு.நந்தகோபாலன்.
தீவகத்தில் உள்ள காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில், கட்டுமானப் பொருள்களை விற்பனை செய்யும் கிளைகள் கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டன.
வேலணை ப.நோ.கூ.சங்கத்தில் கட்டடப்பொருள் விற்பனை நிலையத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே கூட்டுறவு ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் கட்டுமானப் பொருள்கள் கிடைக்கும் விலையில் தீவகத்தில் கிடைப்பதில்லை. போக்குவரத்து உள்ளிட்டவற்றைக் காரணம் காட்டி, பெருந்தொகைப்பணத்துக்கே அவை தனியாரால் மக்களுக்கு விற்கப்பட்டன. மக்களின் பணம் இடைத்தரகர்களால் சுரண்டப்பட்டது. அதேநேரம் தீவகத்தில் கட்டடப்பொருள்களின் தேவையும் அதிகமாக உள்ளது.
இந்த நிலையில்தான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கட்டடப்பொருள்களை விற்பனை செய்யும் திட்டம் ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது.



காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இந்தத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் இந்தத் திட்டம் புங்குடுதீவிலும் நடைமுறைப் படுத்தப்படும். இனிமேல், மக்கள் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் கட்டடப்பொருள்கள் கிடைக்கும், அதே விலைக்கு தீவகத்திலும் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்- என்றார். (ம)

# கூட்டணியாகச் செயற்படும் காலம் விரைவில் கைகூடும்

## யாழில் ரணதுங்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7
ராஜபக்ச அரசுக்கு எதிராக குரல் கொடுப்பதற்காக நாம் எல்லோரும் ஒன்றிணைந்து ஒரு கூட்டணியாகச் செயற்படும் காலம் விரைவில் கைகூடும் என்று போக்குவரத்து விமான சேவைகள் முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,
யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளமை கவலை அளிக்கிறது. வட பகுதியிலுள்ள மக்கள் குறைந்த நேரத்தில் குறைந்த செலவுடன் தென் பகுதிக்கு வந்து செல்வதற்கும் மற்றும் குறைந்த செலவில் தென்னிந்தியாவுக்கு சென்று வருவதற்குமாக இந்த விமான நிலையம் திறந்து விடப்பட்டது. ஆனால், இந்த அரசாங்கமானது அவ்வாறான சந்தர்ப்பத்தை வழங்க மறுத்து விமான நிலையத்தை மூடிவைத்துள்ளது.
இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் வெறுப்புக் கொண்டுள்ளார்கள். இந்த அரசாங்கம் விரைவில் வீடு செல்ல வேண்டிவரும் - என்றார். (த-20)

# கணக்காளர் கஜேந்திரன் கிளிநொச்சிக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 7
வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களக் கணக்காளர் கே.எஸ்.கஜேந்திரன் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
வருடாந்த கணக்காளர் சேவை இடமாற்றத்தின் கீழ் எதிர்வரும் 10ஆம் திகதி தனது கடமைகளை ஏற்கும் வகையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் மற்றும் கல்வித் திணைக்களம் என்பவற்றில் அவர் நீண்ட காலமாக கணக்காளராகப் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

# குற்றச்செயல்கள்: 4 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 7
சுன்னாகம் பொலிஸ் பிரதேசம் மற்றும் கொடிகாமம் பொலிஸ் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும் விசேட புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.
கைதுசெய்யப்பட்ட நான்கு பேரும் உடுவில் பகுதியைச் சேர்ந்த 22, 24, 26 வயதுடையவர்கள்.எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-25)

*கைக்குண்டு...*

வீட்டு சீற்றை மாற்றும் போது, கூரைக்குள் கைக்குண்டு காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இது பற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் அங்கு சென்று கைக்குண்டை மீட்டனர்.
2016 ஆம் ஆண்டிலேயே அந்த வீட்டை குடியிருப்பாளர்கள் வாங்கியுள்ளனர். போர்க்காலத்தில் இராணுவத்தினர் மற்றும் விடுதலைப் புலிகள் அந்த வீட்டில் மாறி மாறி தங்கியிருந்தனர் என்றும் கூறப்படுகிறது. (த-25)

*மன்னாரில்...*

அதிர்ச்சி காரணமாக குறித்த வீட்டில் வசிக்கும் பெண் மயங்கியநிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
கூலித் தொழிலில் ஈடுபடும் பெண் ஒருவரின் வீட்டிலேயே இந்த வெடிப்பு ஏற்பட்டது. பின்னர் கிராமமக்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டது. எனினும், வீட்டிலிருந்த பெறுமதி வாய்ந்த பொருள்கள் சாம்பராகிவிட்டன.
குறித்த வீட்டை, மன்னார் பிரதேச செயலக அலுவலர்கள், நகரசபை அலுவலர்கள் மற்றும் பொலிஸார் பார்வையிட்டனர். பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.
இதேவேளை, இதுபோன்ற தீ விபத்துக்களை கட்டுப்படுத்த, மன்னார் மாவட்டத்துக்கு என்று தனியான தீயணைப்பு வாகனம் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**கிளிநொச்சி**

இதேவேளை, கிளிநொச்சி -கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு-மயில்வாகனபுரம் பகுதியிலும் நேற்றுமதியம் எரிவாயு வெடித்துள்ளது. தருமபுரம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர். அத்துடன், அந்தப்பகுதியிலுள்ள இராணுவத்தினரும் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டனர். (த-213,56,113)

*2022க்கான...*

தவிசாளர் சி.சிறீரஞ்சன் தலைமையில் நேற்று ஆரம்பமானது. தவிசாளர், தனது தலைமை உரையைத்தொடர்ந்து, இந்த ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தை சபைக்கு சமர்ப்பித்தார்.
வரவு -செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தை தொடர்ந்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.
20 உறுப்பினர்களைக் கொண்டுள்ள சபையில், 12 உறுப்பினர்கள் ஆதரவாகவும் மூன்று உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். 5 உறுப்பினர்கள் சபைக்கு நேற்றுச் சமுகமளிக்கவில்லை. அதனால், பாதீடு 9 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. (த-இ)

*வவுனியாவில்...*

தையும் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் குறித்த வீட்டில் வளர்க்கப்படும் நாய் சத்தமாகக் குரைத்துள்ளது. அதனால், வீட்டிலிருந்தவர்கள் கதவைத் திறந்து வெளியேசென்றபோது அங்கு பதுங்கியிருந்த 10 க்கும் மேற்பட்ட கொள்ளையர்கள் திடீரென்று வீட்டுக்குள் புகுந்து, வீட்டிலிருந்தவர்களைத் தாக்கிவிட்டு, கத்திமுனையில் நகைகளையும் பணத்தையும் அபகரித்துச்சென்றனர்.
கொள்ளையரின் தாக்குதலால் குடும்பத் தலைவரான சிறீஸ்கந்தவாசன் (வயது - 59) வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.
கொள்ளைச் சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு, மோப்ப நாய் கொண்டு தேடுதல் நடத்தினர். மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-110)

*பூஸ்டர்...*

நிலையில், அவ்வாறு அச்சம் கொள்ளத்தேவையில்லை. சந்தேகமின்றி குறித்த தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் கேதீஸ்வரன் மேலும் தெரிவிக்கையில்,
தடுப்பூசியை மைனஸ் 70 பாகை செல்சியஸில் வைத்திருந்தால் எவ்வளவு காலமும் வைத்துப்பயன்படுத்தலாம். ஆனால் எமது சாதாரண குளிரூட்டிகளுக்கு தடுப்பூசிகளை மாற்றும்போது ஒரு மாத காலத்துக்கு மாத்திரம்தான் பயன்படுத்த முடியும்.
அந்தவகையில், ஒரு மாத காலத்துக்குப் பயன்படுத்தக்கூடிய தடுப்பூசிகளே எமது மாவட்டங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதைத்தான் இப்போது மக்களுக்கு செலுத்திக்கொண்டு இருக்கின்றோம்.
எதிர்வரும் 10 ஆம் திகதி எம்மிடமுள்ள தடுப்பூசிகள் காலாவதியாகின்றன,எனவே அதற்கு முன்னர் பயமின்றி தடுப்பூசிகளைச் செலுத்த முடியும்.நாடு முழுவதும் மாணவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தவகையிலேயே இது வடக்கிலும் ஆரம்பிக்கப்படவுள்ளது.
இது தொடர்பில், பெற்றோர் பயப்படத்தேவையில்லை. 10 ஆம் திகதிக்கு முன்னர் இந்தத் தடுப்பூசியை சிறுவர்களுக்கு செலுத்திக்கொள்ளலாம்- என்றார். (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஆபத்தை அறிக...!

மலேரியாவைப் பரப்பக்கூடிய நுளம்பான அனோபிலிஸ் டிபென்சி யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியிலும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. 90களில் மலேரியாவால் வடக்கில் இருந்த பெரும் மருத்துவ நெருக்கடி மீண்டும் ஏற்படக்கூடிய ஏதுநிலைகள் வலுவாக உள்ளன என்பதைத்தான் வடக்கு மகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனின் கூற்று கட்டியம் செய்கின்றது.

வடமாகாணமும்சரி, இலங்கையும்சரி – கடந்த இரு வருடங்களாக பெரும் மருத்துவ நெருக்கடிக்குள் சிக்கியுள்ளன. கொரோனாப் பெருந்தொற்று, டெல்டா, ஓமிக்ரோன் என்று புதிய திரிபுகளாக ஒரு முனையில் வதைத்துக்கொண்ருக்கின்றது. மறு முனையில் வருடாந்தம் மழைக்காலத்துடன் இயல்பாக ஏற்படும் டெங்குத் தொற்று இந்த முறையும் தன்னால் முடிந்தளவு துன்பியலைக் கொடுக்கத் தவறவில்லை. இப்படியிருக்கையில்தான் மும்முனைத் தாக்குதலாக வந்து சேர்ந்துள்ளது மலேரியா.

என்னதான் பெருந்தொற்றுக்கள் எம்மை ஆட்கொண்டாலும், மருத்துவத்துறை எவ்வளவுதான் எச்சரித்தாலும் – விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் – எவ்வளவுதூரம் இந்த எச்சரிக்கைகளை மதித்து, விழிப்புணர்வு நடவடிக்கைகளைப் பின்பற்றி நடக்கின்றோம் என்று கேட்டால் அதற்குரிய பதில் ''கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை''.

கொரோனாப் பெருந்தொற்று சீன எல்லைகளைத் தாண்டி, இலங்கைக்குள் ஊடுருவியபோது எமக்கிருந்த விழிப்புணர்வும் – பயமும் இப்போதில்லை. எமக்கு நன்கு தெரிந்த – எமக்குப் பழக்கமான நபர்கள் தொற்றுக்கு ஆட்படுகின்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆனால், அன்றாடம் நிகழும் சாதாரண சம்பவமாக மாறிவிட்டது இந்தப் பெருந்தொற்று. சுகாதார நடைமுறைகள் எங்கும் பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை. பெயரளவில்தான் இன்று அனைத்து நடைமுறைகளும் உள்ளன.

டெங்கு வாரத்துடன் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முடிந்துவிடுகின்றன. சுகாதாரத் துறையினர் வீடுகளைத் தரிசிக்கின்றனர் என்பதற்காகவும் சட்ட நடவடிக்கைகளுக்குப் பயந்தும்தான் இன்று பல வீடுகளில் தூய்மைப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றால், அதை உங்களால் மறுக்கமுடியுமா? டெங்குத் தொற்றை எம் சமூகத்தில் இருந்து விரட்ட வேண்டுமென்று மழைக்காலம் வந்தவுடன் முன்னெச்சரிக்கையாக துப்புரவுப் பணிகளை முன்னெடுப்பவர்கள் எம்மில் எத்தனை பேர்?

இதே பல்லவிதான் மலேரியா விடயத்திலும். 'மீண்டும் மலேரியாவா?' என்ற அச்சம் கலந்த கேள்வியும் வியப்பும் இப்போது தலையெடுப்பதை அவதானிக்க முடிகின்றது. அதை மறுப்பதற்கில்லை. ஆனால், காலப்போக்கில் இந்த அச்சமும் விழிப்புணர்வும் எம்மைவிட்டுக் காணாமல்போய்விடும். 'ஐயோ! மலேரியாவா?' என்ற நிலையில் இருந்து 'அட மலேரியாதானா?' என்ற சகஜ நிலைக்கு – மலேரியாவுடனும் வாழக்கூடிய பழக்கத்துக்கு நாம் சென்றுவிடுவோம். அப்போது மலேரியாவை மீண்டும் விரட்டியடிக்கும் 'தீவிரப் போராட்டத்தில்' எம் மருத்துவத்துறை ஈடுபட்டிருக்கும். அதற்குள் சில மரணங்களும் நிகழ்ந்திருக்கும். யார் கண்டது. கொரோனாவைப்போல மலேரியா நுளம்புகளிலும் புதிய நுளம்புகளும் புதியபுதிய வடிவங்களிலும் பெயர்களிலும் புறப்படவும்கூடும். இப்போதே அணைகட்டாவிட்டால் மிகப்பெரும் சுகாதார நெருக்கடிக்குள் நாம் பந்தாடப்படப்போவது நிச்சயம்...!

நாளொரு நல்வார்த்தை

பிறரது வாழ்வுக்குள் நாம் அனுப்பும் அனைத்தும் நம் சொந்த வாழ்வுக்குள் திரும்ப வந்துவிடுகின்றன. – எட்வின் மார்ஹம்




# சு.க.வினரை உடனடியாக அரசிலிருந்து வெளியேற்றுக

*அமுனுகம அழுத்தம்*



**கொழும்பு, ஜன. 7**

**பொதுஜன பெரமுன தலைமையிலான அரசிலிருந்து சுதந்திரக் கட்சியை உடனடியாக வெளியேற்ற வேண்டும்.-இவ்வாறு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: அரசுக்குள்ளும், அமைச்சரவையிலும் ஒழுக்கம் இருக்க வேண்டும். கூட்டுப் பொறுப்பு பாதுகாக்கப்படவேண்டும். அவ்வாறு முடியாவிட்டால் வெளியேற்றுவதற்கு முன்னர் வெளியேறுவதே நல்லது. இந்த அரசின் வெற்றியின் பிரதான பங்காளி சுதந்திரக் கட்சி அல்ல. அப்பம் சாப்பிட்டுவிட்டு துரோகம் இழைத்தவர்களே அங்குள்ளனர். எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அந்தக் கட்சியினர் துரோகம் இழைக்கலாம். எனவே, பாய்ந்து செல்வதற்கு முன்னர் வெளியேற்றுவதே நல்லது - என்றார். (ம-22)

## அமைச்சரவை மாற்றத்தால் எந்தப்பயனும் கிடைக்காது

*விமர்சிக்கிறார் விமல்*

கொழும்பு, ஜன. 7

"நாட்டின் தற்போதைய நிலைமையில் அமைச்சுப் பதவிகளில் இருப்பவர்களை நீக்குவது உசிதமான காரியமல்ல" இவ்வாறு கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு தேசிய அமைப்பை உருவாக்கி, நாடு தற்போது எதிர்கொண்டு இருக்கும் நெருக்கடி நிலைமையில் இருந்து மீண்டெழுவதற்காக நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளக் கூடிய நேரமே இது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், அமைச்சுப் பதவிகளில் இருப்பவர்களை நீக்குவது உசிதமான காரியமல்ல. வெளியில் இருப்பவர்களையும் இணைத்துக்கொண்டு நல்லிணக்கத்துடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்" - என்றார். (ம-22)

## 15ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவை மாற்றம்!

கொழும்பு, ஜன.7

ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னதாக அமைச்சரவையில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 10ஆம் திகதி இவ்வாறு அமைச்சரவை மாற்றங்கள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது பல அமைச்சுக்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும்விவசாய அமைச்சில் மாற்றம் இடம்பெறலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, எஸ்.பி.திசாநாயக்கவுக்கு இராஜாங்க அமைச்சு பதவியொன்று கிடைக்கும் எனவும் அரசாங்க வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (எ-இ)

நாளை 08.01.2022 சனிக்கிழமை மார்கழி 24

சுபநேரம் : 03.32 - 05.02
ராகுகாலம் : 09.32 - 11.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் தகன நிலையம் அமைத்தல் அடிக்கல் நாட்டும் நிகழ்வு

KILI PEOPLE & மயான அபிவிருத்தி குழு
கிளிநொச்சி பொது மயானம்.
திருநகர், கரைச்சி பிரதேச சபை.




இடம் : திருநகர் பொது மயானம்
காலம் : 07 - 01 - 2022
வெள்ளிக்கிழமை
நேரம் : மு.ப. 11:00 மணி

மயான அபிவிருத்தி குழு, KILI PEOPLE இணைந்து முன்னெடுக்கும் பொதுமக்கள் நன்கொடை நிதி வேலைத்திட்டம். திட்டத்தின் வெற்றியில் இணைந்திருக்கும் பெருங்கொடையாளர் / நன்கொடையாளரான தங்களையும் இந் நிகழ்வில் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.

ஒருங்கிணைப்பு KILI PEOPLE & கிளிநொச்சி பொது மயான அபிவிருத்தி குழு, கரைச்சி பிரதேச சபை



# 12ம் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

jitf.lk
www.jitf.lk




ஜனவரி 2022
21 | 22 | 23
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)
10.00 மு.ப - 8.00 பி.ப

CONCURRENTLY WITH
KALVI JAFFNA 2022

Imalka 071 748 8107
imalka@saexhibitions.com

ORGANIZED UNDER MINISTRY OF HEALTH GUIDELINES


MAIN SPONSOR INSEE CEMENT | CO - SPONSOR SLTMOBITEL | OFFICIAL PARTNERS


"ஓம் விராட் விஸ்வபிரமனே நமக"

# மரண அறிவித்தல்

## இராசையா தெய்வேந்திரன்

### (இந்திரன் ஜுவல்லறி உரிமையாளர் - சாவகச்சேரி)



**தோற்றம்**
**02.09.1950**

**மறைவு**
**06.01.2022**

மீனாட்சி அம்மன் கோயில் வீதி, சங்கத்தானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தெய்வேந்திரன் நேற்று (06.01.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில் வாகனம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வ ராணியின் பாசமிகு கணவரும், தர்சினி, சுகந்தினி, ஆர்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசன், ஆனந்த், இராஜராம் ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்னலட்சுமி, தர்மதுரை (அமரர்), ஜெகசோதி, மங்கையர்க்கரசி, இரத்தினபூபதி, இராஜ கோபால், இரத்தினகோபால், தேவகி (அமரர்), இராஜபூபதி (கனடா), திருநாவுக்கரசு (அமரர்), நாகேந்திரம், இராகவன் ஆகியோரின் அன்பு சகோதரனும், ஹம்சிகா, டிலக்ஷிகா, லக்சிகன், ஜஸ்வின்யா, அபிஷேக், அக்சயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2022) வெள்ளிக் கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**021 227 0252**

(CR 5633)1-6

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 . 12 . 1948

மறைவு
13 . 01 . 2012



## அமரர் சுப்பிரமணியம் சந்திரசேகரம்

(வர்த்தகர். மேற்கு மார்கட் - யாழ்ப்பாணம்)

திதி : பூர்வபட்ச பஞ்சமி [07.01.2022]

ஆண்டுகள் பத்தாயினும் நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டு விடவில்லை நீங்கள் எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள்! எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்

G.P.S. வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# 31ஆம் நாள்நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

08.01.2022

மண்ணில் பிறப்பு
25 . 03 . 1933

விண்ணில் பிறப்பு
09 . 12 . 2021



## அமரர் ஆறுமுகம் அந்தோனியாப்பிள்ளை

(Anto அக்கா)

(முன்னாள் மூத்த தாதி உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை)

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தமது இரங்கலை எம்முடன் பகிர்ந்து கொண்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றியை எமது குடும்பத்தின் சார்பாக தெரிவித்து கொள்கிறோம். அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி திருப்பலி நாளை (08.01.2022) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு மல்லம் / திருக்குடும்ப ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் அதை தொடர்ந்து இல்லத்தில் (உடுவில்) நடைபெறவிருக்கும் அஞ்சலிக்கூட்டத்திலும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(CS 42070) (3.6)

'அன்ரனி வாசா"
நாகம்மான் வீதி,
உடுவில், சுன்னாகம்.
077 728 1617

R.V.P

குடும்பம் சார்பாக,
ஆ. அன்ரன் போல் (மகன்)
445, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் மயில்வாகனம் மாணிக்கவாசகம்

உரிமையாளர் காவடி மார்க் கற்பூரம்
Praba Trading Company Chairman,
Mcsons Organics (PVT) Ltd Chairman,
Founder Of Arun Manickavasagam Hindu College - wattala, Arun Prasanth Foundation President



சிறந்த ஆளுமையும்
உயர்ந்த இயலுமையும் - நிலை
கடந்த மனவுறுதியும்
உறைந்து வாழ்ந்த பெருமகனே!
எம்பதியில் நீர் நிலைத்து
ஐம்பதாண்டுகள் நிறைந்து சிறப்பித்தீர்!
எந்நிலையிலும் மாணிக்கமாய் ஒளிர்ந்து
சொந்த நிலைபிறளாத பெருந்தகையே!
பெருமையெல்லாம் எமக்கே உம்மோடு பயணித்ததில்!
மறுமையு மக்கில்லை இனி - மயி
லேறும் மன்னவன் காலடியே!
வாழும் போது உயர்ந்த வாழ்வைதனைப் போற்றினீர்
வானுறையும் தெய்வத்துள் உம் வாழ்வு நிலைக்கும்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்
20.08.1938

மறைவு
05.01.2022

காவடி மார்க் கற்பூரம் விற்பனை முகவர்
S.V. முருகேசு
நிறுவனத்தினரும் மற்றும் பணியாளர்களும்
154 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
D.4 மருதநகர், [illegible] வீதி,
கரடிபோக்கு சந்தி, கிளிநொச்சி.

S.V.M (PVT) Ltd
No. 122, Dam Street,
Colombo - 12

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீனாவுக்கு இழப்பீடு வழங்கும் அரசு விவசாயிகளுக்கு மறுப்பது ஏன்?

பொலநறுவை விவசாயிகள் அமைப்பு கேள்வி

**கொழும்பு, ஜன. 7**

**பூமியில் நஞ்சு கலக்க முயன்ற சீனாவின் உரக்கப்பலுக்கு இழப்பீடு செலுத்தும் அரசாங்கம், விவசாயிகளுக்கு இழப்பீடு தரமாட்டேன் என்பது எந்தவகையில் நியாயம் என பொலநறுவை விவசாயிகள் அமைப்பு அமைச்சர் மஹிந்தானந்தவிடம் கேள்வி எழுப்பியுள்ளது.**

இது குறித்து விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது:-

'பூமிக்கு விஷம் கலக்க முயன்ற சீன உரக் கப்பலுக்கு இழப்பீடு வழங்க அரசு தயாராகவுள்ளது. அதற்கான இழப்பீட்டை இந்த நாட்டு மக்கள் செலுத்துகிறார்கள். விவசாய அமைச்சர் இந்த நாட்டில் விவசாய சமூகத்தின் அவலத்துடன் விளையாடுகிறார். உரங்கள் மற்றும் திரவ நனோ நைட்ரஜன் இல்லாமல், பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறும். இந்தப் பயிரில் முன்பு கிடைத்த விளைச்சலைப் பெறமுடியாது. இது தெளிவாகத் தெரிந்த விடயம். எனவே, பொய்யான தற்பெருமைகள் வேண்டாம் என்று விவசாய அமைச்சருக்குத் தெரிவிக்கின்றோம். இழப்பீட்டை அனைவருக்கும் வழங்கத் தயாராக இருங்கள். அந்த இழப்பீட்டைப்பெற அனைத்து விவசாயிகள் அமைப்புக்களையும் அனைத்து விவசாயிகள் சமூகங்களையும் ஒரே இடத்தில் ஒன்றிணைப்போம் - என்றனர். (ம)

இந்திரமலை சரிந்து கண்விழி நீரானதோ

இராசையா தெய்வேந்திரன்

(இந்திரன் ஜீவல்லறி உரிமையாளர்- சாவகச்சேரி)



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி...!

தோற்றம் : 02.09.1950
மறைவு: 06.01.2022

**சிறி நகையகம்,**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி.

## பாடசாலை நேரத்தில் கடும் வாகன நெரிசல்

கட்டுப்படுத்தக் கோரிக்கை

கிளிநொச்சி.ஜன.7

பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் முடிவுறும் நேரங்களில், வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்படுவதால், அதனைக் கட்டுப்படுத்தி, மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்று கிளிநொச்சி மகா வித்தியாலய சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள குறித்த பாடசாலையில், 2 ஆயிரத்து 500 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர்.

ஏ-9 வீதியிலிருந்து 25 மீற்றர் உட்பகுதியில் காணப்படும் குறித்த பாடசாலை, வட்டக்கச்சி செல்லும் பிரதான பாதையில் அமைந்துள்ளது.

குறித்த வீதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், அதன் அகலம் சுமார் 3 மீற்றர் மாத்திரமே உள்ளது.

சில அரச திணைக்களங்களும் இந்த வீதிக்கருகில் அமைந்துள்ளன.

இந்த வீதியை குறிப்பிட்ட நேரங்களில் ஒரு வழிப் பாதையாக்குதல், கனரக வாகனங்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தல், வீதியை மேலும் விஸ்தரித்தல், மாணவர் நடைபாதையை அமைத்தல், வாகனங்களைப் பாதையிலிருந்து விலகி, உரிய முறையில் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். குறித்த விடயம் தொடர்பில் மாவட்டச் செயலர் கவனம்செலுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பாடசாலைசமூகம்கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-4,113)

## மாப்பாண முதலியார் நினைவு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்.ஜன.7

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பரிபாலகர் குகஸ்ரீ இரகுநாத குமார தாஸ் மாப்பாண முதலியாரின் நற்செயற்பாடுகளை வெளிப்படுத்தும், 'எளிமைமிகு பரிபாலக ஆளுமை' என்ற கைநூல் வெளியீடு, இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு, நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும். வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் இந்த நூலை எழுதியுள்ளார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஒ-4,இ)

'ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக'

கண்ணீர் அஞ்சலி



இராசையா தெய்வேந்திரன்

(இந்திரன் ஜீவல்லறி உரிமையாளர்- சாவகச்சேரி)

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

தோற்றம் : 02.09.1950
மறைவு: 06.01.2022

ஊழியர்கள்
இந்திரன் ஜீவல்லறி-
சாவகச்சேரி

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம். ஜன.7

எம்.ஜி.ஆர். முன்னேற்றக்கழகத்தின் ஏற்பாட்டில், தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் நினைவு தினத்தை முன்னிட்டு, பண்டத்தரிப்பில் 34 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. சமூக ஆர்வலர் அ.நிரோஜனின் நிதி உதவியில் இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஒ-ரி.27)



'ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக'

கண்ணீர் அஞ்சலி

இராசையா தெய்வேந்திரன்

(இந்திரன் ஜீவல்லறி உரிமையாளர்- சாவகச்சேரி)

எனது தந்தையின் (பஞ்சாச்சரம்) அவர்களின் நீண்டகால நெருங்கிய நண்பரும் எமது நண்பருமாகிய இராசையா தெய்வேந்திரன் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி...!



தோற்றம் : 02.09.1950
மறைவு: 06.01.2022

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சாரங்கா நகைமாடம்
உரிமையாளரும் , ஊழியர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடிக்கல் நடும் நிகழ்வு

மன்னார், ஜன.7
தலைமன்னார் பிரதான வீதியில் அமைக்கப்படவுள்ள 'மடு மாதா' மருத்துவமனைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று மு.ப.10 மணிக்கு இடம்பெற்றது. சகல வசதிகளுடன் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளும் வகையில் அமைக்கப்படவுள்ள குறித்த மருத்துவமனைக்கான அடிக்கல்லை மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை நட்டு வைத்தார். மன்னார் ஆயர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மன்னார் மாவட்டச் செயலர் ஏ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் பொது சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் கில்றோய், மறைமாவட்ட குரு முதல்வர், ஆயரின் செயலாளர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.. (ஓ-ரீ1.56)

# பட்டா மோதி ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.7
பட்டா ரக வாகனம் , மோட்டார் சைக்கிளுடன் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் காயமடைந்தார்.
இந்த விபத்து யாழ். பலாலி வீதி இலுப்பையடிச் சந்திப்பகுதியில் நேற்று நடந்தது.
நாவலர் வீதி வழியாக பயணித்த பட்டா ரக வாகனமும், பலாலி வீதி வழியாக பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து நடந்தது. பட்டாவின் முன் சில்லுக்குள் மோட்டார் சைக்கிள் சிக்கியதால், அதில் பயணித்தவர் கீழே பாய்ந்துள்ளார். விபத்தில் காயமடைந்தநபர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-4.27)



# ஆசியாவின் ராணிக்கு கடுமையான போட்டி!



கொழும்பு, ஜன.7
இலங்கையில் கண்டறியப்பட்ட உலகின் மிகப் பெரிய நீல மாணிக்கக் கல்லான 'ஆசியாவின் ராணி'க்கு 100 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க முன்வந்துள்ள டுபாயை தளமாகக் கொண்ட நிறுவனத்து டன் இறுதி ஒப்பந்தம் செய்வது தொடர்பாக இலங்கை பேச்சு நடத்தி வருகிறது.
தற்போது டுபாயில் இருக்கும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, 'ஆசியாவின் ராணி'யை விற்பனை செய்வது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என கொழும்பை தளமாகக் கொண்டு இயங்கும் ஆங்கில ஊடக மொன்றுக்கு தெரிவித்துள்ளார். 100 மில்லி யன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான சலுகைக்காக அதிகாரிகளும் நீல மாணிக்கக்கல் லின் உரிமையாளரும் நிறுவனமொன்றுடன் இன்னும் கலந்துரையாடல் கட்டத்திலேயே உள்ளனர் என்று அவர் கூறியுள்ளார்.
ஆயினும் இந்த நீல மாணிக்கக் கல்லை இன்னும் அதிக விலைக்கு ஏலம் விடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அதேவேளை, இதற்கு முன்னர், பல உள்ளூர் வர்த்தகர்கள் இந்த நீல மாணிக்கக் கல்லுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க முன்வந்துள்ளனர் என்று உரிமையாளர் சமில சுரங்க பன்னிலாரச்சி தெரிவித்துள்ளார். ஆயி னும் இந்த மாணிக்கக் கல்லை, விஞ்ஞானி ஒரு வர் 200 மில்லியன் அமெ ரிக்க டொலருக்கு மேல் மதிப்பிட்டார் என்றும் அவர் தெரிவித்தார். (ஏ-இ)


## வீடு வாடகைக்கு

யாழ் மருத்துவ பீடத்திற்கு அண்மையிலுள்ள கஜன் திருமண மண்டபத்திற்கு, அருகில் உள்ள வீடு வாடகைக்கு உள்ளது.
(CS 974) 1-6
077 610 9910

## வீட்டு உதவி ஆள் தேவை

இடம் - மட்டுவில் தெற்கு,
வேலை - சமையல் மற்றும் குழந்தை பராமரித்தல் வீட்டில் தங்கி இருந்து
சம்பளம் - பேசி தீர்மானிக்கப்படும்.
077 134 9702 (CS 967) (2.6)

## வாடகைக்கு உண்டு

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வசதியுடன் கூடிய தனி அறைகள் வாடகைக்கு உண்டு. யாழ். K.K.S. வீதி செல்வமகாலுக்கு அருகில்.
தொடர்பு:
(CR 5632)1-6
075 606 8556, 077 596 9463

Regd.No:NAL/DS/1220/PH/181
Health & Wealth
## Van West Clinic & Nursing Home
60, Iyanar Kovil Street, Vannarponnai, Jaffna.
T.P: 021 222 1697

### விஸ்த்தரிக்கப்பட்ட மருத்துவ சேவை

எமது வைத்தியசாலையில் வழமையான வைத்திய சேவைகளிற்கு மேலதிகமாக நீண்ட நாள் நோய் உடையவர்களிற்கான, முதியோர் விடுதிப் பராமரிப்பு, மனநல நோயுள்ளோரிற்கான விடுதி பராமரிப்பு போன்ற மேலதிக சேவைகளை தற்போது வழங்குகின்றோம்.
தொடர்புகளுக்கு:
070 700 9295

## தவறவிடப்பட்டுள்ளது

நேற்று 06.01.2022 கொக்குவில் நாமகள் வீதிக்கும் திருநெல்வேலி பகுதிக்கும் இடையில் 1 1/2 பவுண் சங்கிலி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(CS 974) 1-6
075 203 5330

## வேலையாட்கள் தேவை

A9 வீதி முருகண்டியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
காசாளர், சிட்டை எழுதுனர், உணவு உற்பத்தியாளர், உணவு பரிமாறுபவர், உணவு பொதி செய்வோர், சுத்திகரிப்பாளர், Ice Cream உற்பத்தியாளர், Ice Cream பொதி செய்வோர்.
ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(CR 975)1-6
தொடர்புகளுக்கு: 076 935 4332

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

### பிரிவு-34

புதிய கல்வியாண்டுக்கான நேரடி ஆங்கில, கணினி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
- Diploma in English / Spoken English
- Diploma in ICT / MS-Office
- Certificate / Foundation in English/ICT

காலம் : 3 மாதங்கள்
சான்றிதழ் பிரிவுகள்
ஆரம்பம் : 08.01.2022
காலை 10.00 AM
(CS 9721)-6
IPS திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
T.P: 021 4340229 / 076 685 2529

## வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள புடைவை மற்றும் பான்சி வியாபார ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை. (பெண்கள் மட்டும்) மல்லாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
(CS 42068) (3/6)
தொடர்பு 077 487 6656


## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கழுகாசலம் இந்திராதேவி
தோற்றம் 20.09.1947
மறைவு 07.01.2005

என்றும் எமது அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து இன்றுடன் 17 ஆவது ஆண்டுகளாகி விட்டது. உமது ஆன்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உமது நினைவுகளுடன்
பிள்ளைகள் ... க. வைகுந்தன், மருமக்கள் மற்றும் உறவினர்கள்.
சாந்த தோட்டம்
புலோலி வடகிழக்கு, புலோலி.
(CS 17840)(3...)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 29.10.1948
மறைவு 09.12.2021

### அமரர் பாலசுப்பிரமணியம் புவனேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (07.01.2022) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். நாளை மறுதினம் (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் அன்னாரின் நினைவாக ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பளை.
குடும்பத்தினர்
077 509 959...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக

# மாணவர் ஒன்றிய தேர்தல் விரைவில்

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ளது. கடந்த இரு வருடங்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்துக்குத் தேர்தல் இடம்பெறாத நிலையில் தற்போது மீண்டும் தேர்தல் இடம்பெறவுள்ளது.

2019ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களே இதுவரை காலமும் மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளாக இருந்துவந்த நிலையில் அவர்கள் பட்டம்பெற்று வெளியேறி விட்டனர்.

அண்மையில் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற பிரதான கூட்டமொன்றின் போது இது தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதையடுத்தே மேற்படி தேர்தலுக்காக மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் என.

(ம-125)


## சேவைநலன் பாராட்டு

**Ms.Vasuki Rajasingham**



(ஓய்வுபெற்ற அதிபர்)

கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை நவீல்ட் பாடசாலையின் உயர்வான வளர்ச்சிக்காக தனது அர்ப்பணிப்புள்ள நிறைவான உயர்வான சேவையை வழங்கி ஓய்வுபெற்றுள்ள அதிபர் அவர்களை மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஐக்கிய சங்கம்
யா/நவீல்ட் பாடசாலை, கைதடி.

(CS 970) 1-6

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2021 ஆம் ஆண்டிற்கான
யுனிவர்ஷல் சோட்டோகான் கராத்தே யூனியனால் இணையம் ஊடாக நடத்தப்பட்ட கழகங்களுக்கிடையிலான சர்வதேச (ஆசிரியர்களுக்கான) போட்டியில் விடத்தல் தீவு, மன்னார் மாவட்டத்தைச் சார்ந்தவரும் சர்வதேச சக்கூரா. சோட்டோகான் கராத்தே சங்கத்தின் பொறுப்பாசிரியருமான

**சென்செய். அ. அமல்ராஜ்**

வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.
அத்துடன் அண்மையில் 7 ஆவது கறுப்பு பட்டியினைப் பெற்ற கழகத்தின் பிரதம ஆசிரியர் **சென்செய். S.விஜயராஜ்** அவர்களிற்கு இலங்கை கராத்தே சம்மேளனத்தின் செயலாளரினால் ஒலிம்பிக்குழுவால் வழங்கப்பட்ட இலட்சனையும் வழங்கப்பட்டதையிட்டு மகிழ்வடைகின்றோம்.
இவர்கள் இன்னும் பல சாதனைகள் புரிய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
யூனியன் விளையாட்டு கழகம் - விடத்தல்தீவு
சர்வதேச சக்கூரா சோட்டோகான்
கராத்தே சங்கம், மன்னார் மாவட்டம்.

(cr.36968) (2.6)

Shan Builders

## வேலை வாய்ப்பு

(கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில்)

01. கட்டட பொறியியலாளர்.
02. Quantity surveyor (QS).
03. தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( T.O - NCT or equal)
04. கணக்காளர். ( Accountant cum computer operator)
05. கம்பி கட்டுபவர், சட்டரிங் காப்பெண்டர் மற்றும் மேசன்

தொடர்புகளுக்கு:- 0777076094, 0772295600 (Whatsapp, Viber).
மின் அஞ்சல் :- shanbuilders@ gmail.com

(cs.42053) (2.6)

## மகாதேவாசுவாமிகள் சிறுவர் இல்லம் பகிரங்க ஏல விற்பனை

எமது நிறுவனத்தில் பாவனைக்கு மேலதிகமாகவுள்ள மற்றும் எமது பாவனைக்கு தேவையற்ற பொருட்களினை 16.01.2022ம் திகதி காலை 10.30 மணிக்கு எமது பிரதான அலுவலக வளாகத்தினுள் ஏலவிற்பனை செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இப் பொருட்களை கொள்வனவு செய்யவிரும்புவோர் பின்வரும் நிபந்தனைக்கு அமைய செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது.

- விற்பனைக்குரிய பொருட்களை ஜெயந்திநகரில் உள்ள எமது தலைமை அலுவலகத்தில் இன்றிலிருந்து 14.01.2022ஆம் திகதிவரை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 04.00மணி வரை பார்வையிடலாம்.
- ஏல விற்பனையில் பொருட்களை பெறுபவர்கள் உரிய தொகையை பணமாக செலுத்தி அன்றைய தினமே பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.
- ஏலவிற்பனையின் போது கூடியவிலைகோருபவர்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் விற்பனைக் குழுவின் தலைவரின் முடிவே இறுதி முடிவாக ஏற்றுக் கொள்ளப்படும்.
- பொருள் தனியாகவும் பொருட் தொகுதியாகவும் விற்பனை நடைபெறும்.
- ஏலவிற்பனைக்குரிய பொருட்கள் விபரத்தினைப் பெற விரும்புவோர் மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

ச மோகனபவன்,
தலைவர்,
மகாதேவாசுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர் ,கிளிநொச்சி
President :+94773024349 Email:rasa46@yahoo.com

(CR 36984) (3/6)

### போட்டிப் பரீட்சை நேரடி வகுப்புக்கள்

சனி (8.1.2022)
9.00 am→2.00 pm
பொது உளச்சார்பு
த.தவசேகர்

- MSO,BOC
- SLEAS
- SLAS
- SLACS

சகல வினாத்தாள்களுக்கும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)
076 688 3394

### பணியாளர் தேவை

நல்லூரில் இயங்கும் பிரபல புடவை விற்பனை நிலையத்திற்கு புடவை விற்பனையில் அனுபவ மிக்க ஆண் பணியாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(CR 56321) 1-6

077 110 4770

## கேள்வி அறிவித்தல் யாழ்ப்பாணம் மாநகரசபை கழிவுப் பொருட்கள் ஏற்றுமதி

யாழ். மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் தரம் பிரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் வழங்குனரிடமிருந்து யாழ். மாநகர சபை பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ். மாநகரசபை, பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 20.01.2022 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் பிற்பகல் 3.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி உள்ளடங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த சேவை தொடர்பான விபரங்களை அலுவலக நாட்களில் யாழ்.மாநகரசபை, பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்களை 21.01.2022 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் **தலைவர், பெறுகைக்குழு மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது ஆணையாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்படிவங்கள் கேள்விச் சபையால் நிராகரிக்கப்படும்.

கேள்வி திறத்தல் 21.01.2022 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை கேள்விச்சபைக்குரியதாகும்.

தலைவர்,
பெறுகைக்குழு
யாழ். மாநகரசபை

(CR 36981) (3/6)

## மணிவிழா வாழ்த்து

07.01.2022



**திரு. செல்வரத்தினம் பகீரதன்**
(B.Sc,Dip.in Ed)
(இலங்கை ஆசிரியர் சேவை - தரம் : 1 உப அதிபர்)

எழில்கொஞ்சும் யாழ். மண் தன்னில் ஏற்றமுறு
புன்னாலைக் கட்டுவனில்
பெற்றோர் செய் பெரும் பயனாய்ப் பிறந்த பெருமகனார் பகீரதன்
இன்பமாய்க் கல்வி கற்று வண்ணமாய்க் கணிதக்கலை
பயின்று பயிற்றுவித்தார்
கண்டாரைக் கவர்ந்து கனிவுடனே பழகி
கலங்கரை விளக்கென மிளிர்ந்து நின்றார்.
மாணவர் உலகு மாண்புறும் வகையிலே
மானிட நேயம் மிக்க நல்லாசானாய்
கச்சிதமாகக் கற்பித்து உயர்ந்துமே மாணவர்
மனங்களில் நிறைந்த நல் ஆசான்
மணிமாக்காணும் வேளை உளம்மிக மகிழ்ந்து
நோய் நொடியின்றி நூறாண்டு காலம் வளமாக வாழ்க வென்றே
உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : கல்லூரி சமூகம்
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி,

(cs.42069) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 . 02 . 1963

மறைவு 30 . 12 . 2019

அமரர் திருமதி

## ஜெயராமநாதன் கலாநிதி

ஆண்டு இரண்டு சென்றாலும்
உங்கள் உருவம் எம் கண் முன்னே தெரிகிறது - அம்மா
கனவுகளாய் தோன்றி கண் கண்ட தெய்வமாக
தோன்றுகிறீர்கள் - அம்மா
எமக்கு என்று ஒரு வாழ்வுக்கு
வாழி காட்டி, வாழ்வாங்கு வாழ வைத்த - அம்மா
காலனவன் போட்ட கணக்கினை கடந்து ஈராண்டு கடந்து விட்டது
- இன்னும் மீளவில்லை - அம்மா
என்றும் உங்கள் மீது கொண்ட நினைவுகள் காலத்தால் அழியாத
- நினைவலைகள் - அம்மா
மீண்டும் ஒரு ஜனனம் இருந்தால் உன்னதமான பெண் மகவாய்
- எங்களது வம்சத்தில்
வந்துதிக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம் - அம்மா

இல. 08, கண்டுவில் ஒழுங்கை
சாவகச்சேரி
07.01.2022

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

(cr 36979) (2.6)

# மரண அறிவித்தல்



பிறப்பு 20 . 06 . 2011

இறப்பு 05 . 01 . 2022

## செல்வன் செந்தீஸ் டிதுர்சன்

(யா/ மகாஜனக்கல்லூரி, தரம் – 5)

சண்முகரட்ணம் செந்தீஸ் சாமினி ஆணல்ட் செந்தீஸ் (யா/ யாழ்ப்பாணக் கல்லூரி - ஆசிரியை) தம்பதியினரின் கனிஷ்ட புத்திரன், செந்தீஸ் டிதுர்சன் நேற்று முன்தினம் (05.01.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் செந்தீஸ் டினோஷனின் (யா/ மகாஜனக்கல்லூரி, தரம் - 10) அருமைத்தம்பியும், செல்லையா, சண்முகரட்ணம், குலராணி சண்முகரட்ணம், அருட்பணி எஸ். சி. ஆணல்ட் (தென்னிந்திய திருச்சபை), தேவமனோகரி ஆணல்ட் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் குப்பிளான் ஏழாலை காடா கடம்பை இந்து மயானத்தில் இன்று (07.01.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

இராமத்தின் சீமா,
வைரவர் கோவில் வீதி,
ஏழாலை தெற்கு,
சூராவத்தை, சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்
077 401 8598

# கோத்தாபயவின் உரைக்கு விளக்கம் கோரும் ரணில்!

கொழும்பு, ஜன.7

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிகழ்த்தவுள்ள கொள்கை விளக்க உரை தொடர்பில் சபையில் விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.**



இது தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை ஜனவரி 19, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது சம்பந்தமாக கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுக்கவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வை 2021 டிசெம்பர் 12ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இடைநிறுத்தினார். இதற்கான விசேட அரசிதழும் வெளியிடப்பட்டது.

இந்த அறிவித்தலின் பிரகாரம் புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் 2022 ஜனவரி 18 ஆம் திகதி முற் பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய நாடாளு மன்றக் கூட்டத்தொடர் ஜனாதிபதி தலைமையில் ஆரம்பமாகும். அன்றைய தினம் அவரின் கொள்கை விளக்க உரையும் இடம்பெறும். அந்த உரை மீதே ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க விவாதம் கோரியுள்ளார். (எ-44)

# 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 08.05.1967

மறைவு 09.12.2021

எமது LIC காப்புறுதி நிறுவனத்தின்
யாழ் கிளையில் விற்பனை
மேற்பார்வையாளராக
கடமையாற்றிய

## இராசையா யோகராஜா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு நாமும் இத்துயரில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆயுள் காப்பீட்டு கூட்டுத்தாபனம் (இலங்கை)
வரை (LIC)

(CR 36983) (3/6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 03 . 1945

மறைவு 06 . 01 . 2022

## பாலசுப்பிரமணியம் சிறீஸ்கந்தலீலா

இல.183, 4ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சிறீஸ்கந்தலீலா நேற்று (06.01.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் லில்லிமாகிறற் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், சிறீஸ்கந்தரட்டினம், சிறீஸ்கந்ததேவி (ஜேர்மனி), சிறீஸ்கந்ததேவா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2022) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


077 7155 866

தகவல்:
குடும்பத்தினர்.
(சிறீ மோட்டர்ஸ்)

(CS 9761)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## மைக்கல் அன்ரனி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மைக்கல் அன்ரனி அவர்கள் நேற்று முன்தினம் (05.01.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மைக்கல் ராசமணி தம்பதிகளின் இளைய புதல்வரும், காலஞ்சென்ற செபமாலை பரிமளம் தம்பதிகளின் பாசமிகு மூத்த மருமகனும், ரோஸ் டிலிமா (ராசா) அவர்களின் அன்புக் கணவரும், டனிக் வினோத்காந் (Holland) வோல்டன் விஜித்காந், அனுத் ரோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹேமா (Holland), யசோ ஆகியோரின் மாமனாரும், கத்தரின் (Holland), சறோன், ஸ்ரீபன் ஆகியோரின் பேரனும், செல்வராசா, லீவியற், காலஞ்சென்ற புளோறன்ஸ் மற்றும் லெஸ்லி, இயேசு, ராஜன், யூஜின், ஞானேஸ், தவம், மெலானி ஆகியோரின் சகோதரனும், மேரிஸ்ரெல்லா (கிளி), சிறில், அஞ்சலா, யூலியஸ், வசந்தி, அல்போன்ஸ், ஜெயந்தி, அன்ரன், அலன்ரைன், கனிற்றா, ஜெனிற்றா, பிறேம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (07.01.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

(CS 42067) (3/6)

# ஆற்றுப்படுத்தல் ஆராதனை

## முத்தையா சாள்ஸ் இரட்ணராஜா (குஞ்சு)



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட முத்தையா சாள்ஸ் இரட்ணராசா (குஞ்சு) கடந்த 29.12.2021 புதன்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா (ஓவசியர்) லில்லி பவளம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வேத நாயகியின் (வேதா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிலிப் அற்புதராசா, புஷ்பராணி, காலஞ்சென்ற ஜெயராசா, காலஞ்சென்ற யோகராணி, ஜீவராசா, முத்துராசா ஆகியோரின் பாசமிகு சகோதர னும், பரம்சோதி, கருணேஸ்வரி, சௌந்தர்ராஜன், சாந்தகுண தேவி, நரேந்திரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

லில்லி டிலானி (பிரான்ஸ்) பிலிப், தர்மபாலன் (பிரான்ஸ்) ஏனஸ்ட் சஞ்சீவ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகிந்தன், சந்திரிகா றொஷானி, அபிஷா பைரவி ஆகியோரின் அன்பு மாம னாரும் ஓவியா, இனியா, இலக்கியன், அட்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆற்றுப்படுத்தல் ஆராதனை 07.01.2022 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நுணாவில், அமெரிக் கன் சிலோன் மிஷன் தேவாலய (CACM) நல்லாயன் மண்டபத்தில் நடைபெறும். இதனைத் தொடர்ந்து அன்னாரின் அஸ்தி அடங்கிய பேழை சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

பவள வாசா, கண்டி வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

077 1155 867
021 2057 506

தோற்றம்: 13.12.1943 மறைவு: 29.12.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் தரப்பு...

கடந்த 21 ஆம் திகதி இறுதி செய்யப்பட்ட ஆவணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட பல தலைவர்களும் நேற்று ஒப்பமிட்டனர். இந்த ஆவணம் விரைவில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஊடாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிவைக்கப்பட்டவுள்ளது.

அந்த ஆவணத்தில் இரா.சம்பந்தன் (தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), க.வி.விக்னேஸ்வரன் (தலைவர், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி), சுரேஷ் பிரேமச்சந்திரன் (தலைவர், ஈ.பி.ஆர்.எல்.எவ்.), என்.ஸ்ரீகாந்தா (தலைவர், தமிழ்த் தேசியக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (தலைவர், ரெலோ), த.சித்தார்த்தன் (தலைவர், புளொட்) ஆகியோர் நேற்று ஒப்பமிட்டனர். மாவை சோ.சேனாதிராசா (தலைவர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி) விரைவில் அந்த ஆவணத்தில் ஒப்பமிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுடனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று தொலைபேசியில் பேசினார்.

இதன்போது மலையக மக்கள் விவகாரம் தொடர்பில் மனோ கணேசன் தரப்பினரதும், முஸ்லிம் மக்கள் விவகாரம் குறித்து ரவூப் ஹக்கீம் தரப்பினரதும் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அவர்களின் பங்களிப்பு இல்லாமலேயே பொது ஆவணத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பும் முடிவை சம்பந்தன் எடுத்தார்.

கடந்த 21ஆம் திகதி கொழும்பிலுள்ள 'குளோபல் டவர்' ஹொட்டலில் நடைபெற்ற தமிழர் தரப்புக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்ட கடிதமே இப்போது தமிழ்க் கட்சிகளின் தலைவர்களால் ஒப்பமிடப்பட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படுகின்றது.

அதற்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் ரெலோ ஓர் ஆவணத்தை முன்வைத்திருந்தது. தமிழ்க் கட்சிகளின் பரிந்துரையுடன் அந்த ஆவணத்தின் சில விடயங்களும் தலைப்பும் மாற்றப்பட்டு புதிய ஆவணம் 21ஆம் திகதிய கூட்டத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

அதிலும் சிலமாற்றங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. குறிப்பாக மனோ கணேசன், ஹக்கீம் உள்ளிட்ட தரப்பினர் அந்தச் சில மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தனர். அதன்படி, திருத்தங்களை மேற்கொள்ளும் பணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட ஆவணம் அடுத்த கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு கையொப்பமிட்டு இந்தியப்பிரதமருக்கு அனுப்புவது என்று முன்னர் தீர்மானிக்கப்பட்டி ருந்தது. எனினும், மனோ மற்றும் முஸ்லிம் கட்சியினர் குறித்த ஆவணத்தில் கையொப்பமிட உடன்படாத காரணத்தால் சுமந்திரனிடம் வழங்கப்பட்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்ட ஆவணம் இறுதிநேரத்தில் கைவிடப்பட்டு, தமிழ்க் கட்சிகளின் பரிந்துரையுடன் மாற்றம் செய்யப்பட்டு 21ஆம் திகதிய கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட ஆவணமே இறுதி செய்யப்பட்டு வடக்கு ,கிழக்கு தமிழ்க் கட்சியினர் மாத்திரம் கையெழுத்திட்டு அனுப்புவது என்று முடிவுசெய்யப்பட்டு, கையொப்பமும் இட்டுள்ளனர். இந்த ஆவணத்தை சம்பந்தன் தலைமையிலான தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்தியத் தூதுவரைச் சந்தித்து அவர் மூலமாக இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைப்பர் எனத் தெரிகின்றது. (த-22)

## அரச அலுவலர்களின்...

வெளியிடப்பட்டுள்ளதாக பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது. 2022 வரவு - செலவுத் திட்ட யோசனைக்கமைய இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிக்கும் திட்டத்துக்கு தாம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம் என்று இலங்கை நிர்வாக சேவைச் சங்கம் முன்னர் தெரிவித்திருந்தது.

ஓய்வுபெறும் வயது 62 ஆக காணப்பட வேண்டும் என பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தினூடாக குறித்த சங்கம் இதனை தெரிவித்திருந்தது.

இந்தநிலையில், அரச உத்தியோகத்தர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிக்கவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்தச் சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (த-இ)

## வடராட்சியில்...

தெரிவிக்கப்பட்டது.

குறித்த மண்டபத்திலிருந்து தீ பரவி புகை வெளியேறுவதை அவதானித்து அங்கிருந்தவர்கள் துரிதமாகச் செயற்பட்டு உடனடியாகவே மண்டபத்தில் இருந்த தீயணைப்பு இரசாயனத்தையும், மணல் மண்ணையும் பயன்படுத்தி தீயை அணைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மின்சார சபைக்கும் அறிவித்தனர். துரிதமாகச் செயற்பட்ட மின்சார சபையினர், மின் இணைப்பையும் துண்டித்தனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## சிறைப்படுகொலை...

தொடர்பான வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்படவிருந்தநிலையில், விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றம் தீர்ப்பை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

கிஹான் குலதுங்க, பிரதீப் ஹெட்டிஆராச்சி மற்றும் மஞ்சுள திலகரட்ண ஆகிய மூவரடங்கிய மேல்நீதிமன்ற விசேட நீதிபதிகள் குழாம் குறித்த வழக்கின் தீர்ப்பை நேற்று அறிவிக்கவிருந்த நிலையில் பின்னர் அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் 8 சிறைக் கைதிகள் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04 ஆம் திகதி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சட்டமா அதிபரால் வழக்கின் பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த சிறைச்சாலைகளின் முன்னாள் உளவுப்பிரிவு அதிகாரியான இந்திக்க சம்பத் என்பவர் வழக்குத் தொடரப்பட்ட சந்தர்ப்பத்தில் வெளிநாடு சென்றிருந்தார்.

அவரின்றி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், முறைப்பாட்டாளர் தரப்பினரால் அவருக்கு எதிரான சாட்சிகள் முன்வைக்கப்படவில்லை என சாட்சி விசாரணை [illegible] நீதிபதிகள் குழாம் தெரிவித்தது.

அதற்கிணங்க, குறித்த பிரதிவாதியை விடுவித்து விடுதலை செய்த நீதிபதிகள் குழாம், நியோமால் ரங்கஜீவ மற்றும் எமில் ரஞ்சன் லமாஹேவா உள்ளிட்டோருக்கு எதிராக வழக்கு விசாரணையை தொடர்ந்தும் முன்னெடுத்தது.

2012 நவம்பர் 09 ஆம் திகதி சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட கலகத்தின் போது 27 கைதிகள் கொல்லப்பட்டிருந்தாலும் 08 கைதிகள் கொல்லப்பட்டமை தொடர்பிலேயே வழக்கை தாக்கல் செய்வதற்கு போதுமான சாட்சிகள் சட்டமா அதிபருக்கு காணப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

## மோடிக்கான...

விடுதலைப் புலிகளின் கனவான தமிழீழத்துக்கான வரைவாகவே இருக்கும்."

இப்படிச் சொல்கின்றார் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் இந்நாள் கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் ஒப்படைப்பதற்காகத் தமிழ்பேசும் தரப்புக்களின் பொதுநிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆவணத்தில் வடக்கு, கிழக்கு தமிழர்களின் கட்சிகளின் தலைவர்கள் மாத்திரம் நேற்று ஒப்பமிட்டன. இதில் மலையக, முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் எவரும் ஒப்பமிடவில்லை. இது தொடர்பில் நேற்றிரவு ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தமிழ்பேசும் கட்சிகளுக்கிடையில் அதன் தலைவர்களுக்கிடையில் பொதுவான இணக்கப்பாடு இல்லை; ஒற்றுமை இல்லை. இந்தியப் பிரதமருக்கான பொது ஆவண விவகாரம் இதை வெளிக்காட்டுகின்றது.

வடக்கு-கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த தமிழ்மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் தமிழ்பேசும் கட்சிகளோ அல்லது இந்தியா உள்ளிட்ட நாடுகளோ ஒருபோதும் அரசியல் தீர்வை வழங்காது.

இலங்கை எனும் எமது நாட்டில் உள்ளகப் பிரச்சினைகளில் தலையிட வெளிநாடுகளுக்கு அனுமதி இல்லை. நாட்டின் அரசுதான் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும்.

தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும் நடவடிக்கையில் எமது அரசு ஈடுபட்டுள்ளது. ஆனால், தமிழ்பேசும் கட்சிகளின் தலைவர்கள் எம்மை நாடாமல் சர்வதேசத்தை நாடுவதுதான் விசித்திரமாகவுள்ளது" - என்றார். (த-22)

## இறந்தோரின்...

நீர் நிலையாக மாற்ற வேண்டிய நிலை ஏற்படும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமுமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் ஆரியகுளம் எமது பாரம்பரியம். அது சேற்றுக் குப்பைகளுடன் காணப்படும்போது ஒருவரும் திரும்பிப் பார்க்கவில்லை. அது யாழ்.மாநகர சபையின் முயற்சியால், தற்போது அழகாக சீரமைக்கப்பட்டு மக்கள் தமது பொழுது போக்கு நேரத்தை செலவழிப்பதற்காக அங்கு வருகின்றனர். ஆனால், வடக்கு மாகாண ஆளுநர் தற்போதுதான் தூக்கத்திலிருந்து விழித்தவர்போல புதுப் புரளியைக் கிளப்பியுள்ளார்.

"ஆரியகுளம் மாநகரசபைக்குச் சொந்தமானது என்பதற்கான ஆவணங்களைச் சமர்ப்பியுங்கள், சமய சின்னங்கள் தொடர்பாக வெளிப்படுத்துங்கள்" என்று அவர் மாநகர சபைக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அன்று ஆரியகுளம் சீரமைக்கப்பட்டு திறந்து வைக்கும் நிகழ்வுக்கு ஆளுநர் வருகை தந்தபோது, அவருக்கு தெரியவில்லையா இது யாருடைய சொத்து என்று?. ஆரியகுளம் எமது சொத்து. அதையும் அரசு கையகப்படுத்தப் பார்க்கிறது. வடக்கு மாகாண ஆளுநர் ஜனாதிபதி கோத்தாவின் எடுபிடி என்பது எமக்கு தெரியும். அவர் தன்னுடைய நிர்வாக வேலைகளை மட்டும் பார்க்க வேண்டும்.

எமக்கு விளையாட்டுக் காட்டவேண்டாம். மாநகர முதல்வரை பணியவைக்கும் செயற்பாட்டுக்கு தமிழ் மக்கள் துணை போக மாட்டார்கள். பௌத்த மக்கள் வழிபடுவதற்காக ஆரியகுளத்துக்கு அருகில் நாக விகாரை உள்ளது. அங்கு போய் யாரும் வழிபடட்டும். நாம் அதைப்பற்றி ஏதும் கேட்வில்லை. கண்டி வாவியில் பிள்ளையார் கோவில் கட்ட விடுவீர்களா? ஏன் இப்போது இங்குவந்து புதுப் புரளியை ஆளுநர் கிளப்புகின்றார்?

மதச் சின்னங்கள் தொடர்பில் அவர் பிரச்சினை செய்வாரானால், மக்களின் புனித அஸ்தி கரைக்கும் இடமாக ஆரிய குளத்தை மாற்ற வேண்டி வரும். அன்று திறப்பு விழாவுக்கு வருகை தந்தவர், இப்போது விடிய விடிய ராமர் கதை கேட்பது போல, ஆரியகுளம் யாருடையது என்று கேள்வி எழுப்புகின்றார்.

ஆளுநர் என்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வர முடியுமா? மக்களைத் துன்பப் படுத்தாதீர்கள். மக்களின் பிரச்சினையை முதலில் பாருங்கள், சம்பளத்தை எடுத்து விட்டு முடங்கிக்கிடக்காமல் மக்களின் தேவைகளை அறிந்து செயற்படுங்கள். மதப்பிரச்சினையைத் தூண்டாதீர்கள். வடக்கில் தமிழர்களின் பாரம்பரிய இடங்கள் இந்துமத ஸ்தலங்கள் ஆக்கிரமிக்கப்படும்போது எங்கு சென்றீர்கள்? இப்போதும் தொடர்ந்துகொண்டிருக்கும் ஆக்கிரமிப்புக்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? அவை உங்கள் கண்ணுக்கு தெரியவில்லையா? ஆளுநரைக் கட்டுப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம். இல்லையென்றால் இவர் போகும் இடம் எல்லாம் பிரச்சினை ஏற்படும் நிலை வரும் - என்றார். (த-27)

## அரிசி விலை...

தியம் உள்ளதாக ஒன்றிணைந்த அரிசி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா தெரிவித்தார்.

சேதனப் பசளைத் திட்டத்தின் காரணமாக விவசாயிகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்கள். பிரதான நெற்செய்கை பிரதேசங்களிலுள்ள விவசாயிகள் விவசாய நடவடிக்கையிலிருந்து விலகியுள்ளார்கள். இந்தமுறை பெரும்போக விவசாயத்தில் அதிக விளைச்சலைப் பெறமுடியாது. விவசாயிகள் தங்களின் சுயதேவைக்காக மாத்திரமே விளைச்சலை மேற்கொண்டுள்ளார்கள்.

டொலர் நெருக்கடி காரணமாக மக்கள் அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது வரிசையில் நிற்கிறார்கள்.

இந்தநிலையில், எதிர்வரும் மாதம் தொடக்கம் பொதுமக்கள் அரிசியைப் பெற்றுக் கொள்வதற்காகவும் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

கொரோனாத் தாக்கத்தை தொடர்ந்து நாடு அழிவை நோக்கிச் செல்லும். இயற்கைக் காரணிகளால் அந்த அழிவு ஏற்படாது. அரசாங்கத்தின் தவறான விவசாய கொள்கைத் திட்டத்தால் முழு நாடும் பெரும் அழிவை நோக்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றும் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KBK Accounting College**

*கந்தர்மடம் *கொழும்புத்துறை
A/L கணக்கீடு | Gr.10,11 வணிகமும் கணக்கீடும்
திரு.கி.பா.பாலகுமன் M.Com 077 216 8884

(cs.957) (2.6)

**மழலைகளின் வெற்றிக்காக யாழ்நகரில்**

தரம்: 05 (2022 தோற்றவுள்ளவர்களுக்கு) — புலமைப்பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு
தரம்: 04 (2023 தோற்றவுள்ளவர்களுக்கு) — ஆரம்ப அடிப்படை வகுப்பு

தைப்பொங்கல் திருநாளில் ஆரம்பம் : 14.01.2022 வெள்ளி

தரம்: 5 - 2.30 P.m | தரம்: 4 - 3.30 P.m

வலி மேற்கின் பிரபல்யம் பெற்ற ஆசிரியர்

**திரு. M. சுகந்தன்** - B.A (Dip.in. Teach) PGDE

- வலி. மேற்கில் கற்பித்தலில் தனக்கென ஒரு தனித்துமான பாணியைப் பின்பற்றும் ஆசிரியர் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு வழிகாட்டி, வெட்டுப்புள்ளியை விட அதிக புள்ளிகளைப் பெறவைக்கும் பிரபல ஆசிரியர்
- ஆசிரியரின் நூல்கள் - யுனிலங்காஸ் பப்ளிக்கேசன் நிறுவனத்தினால் இலங்கை பூராகவும் விற்பனை செய்கின்றன
- நுண்ணறிவு, வெற்றிக்குவழிகாட்டி, கட்டுரைசங்கமம் போன்ற நூல்களை இன்று வரைக்கும் தொடர்ச்சியாக வெளியிட்டு அகில இலங்கை ரீதியாக முத்திரை பதித்த பிரபல ஆசிரியர்.

பெற்றோர் கவனத்திற்கு
தொடர்பரீட்சைகள் - வினாப்பத்திரம் I , II ஆகியவற்றிற்கு தனித்தனியாக பரீட்சை நடைபெறுவதுடன் ஒவ்வொரு அலகிற்கும் விசேட பரீட்சைகள் நடைபெற்று புள்ளிகள் வழங்கப்படும்.

அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை முற்கூட்டியே பதிவுசெய்யவும்
07.01.2022 தொடக்கம் 12.01.2022 வரை
அனுமதிபெற்றுக்கொள்ளும் நேரம்: சனி, ஞாயிறு 12.30 - 4. 30
ஏனைய நாள்கள் 3.30 - 5.00 Pm

(cr.36982) (2.6)

இடம்: பொருளியற் கல்லூரி நாவலர்றோட் - யாழ்ப்பாணம். T.P.: 077 376 3511

**SENG. ACADEMY**

IELTS - New batch ஆரம்பம்
Sp.Offer 10 % Discount உடன்
Basic & Advanced grammar Class
Free + Handouts +CDs
53, சிவகுருநாதர் வீதி, Brown Rd.
077 798 9830
GR.6,7,8,9 Eng Spoken with grammar

**NEC**
Empowering Educators to Inspire Students
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2023
கலை, வர்த்தக கணித உயிரியல்
புதிய பிரிவு ஆரம்பம்
08.01.2022 சனி 8.00 மணி
076 535 0999, 077 469 6695

போட்டிப் பரீட்சைக்கான நேரடி வகுப்புக்கள்
**நாவலர்** கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
MSO முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
ஆரம்பம்:-
08.01.2022 சனி காலை 9.00 மணி
பிரதி சனி, ஞாயிறு காலை 9-3 மணி
எதிர்பார்க்கை வினாக்கள், விரிவான விளக்கம் அண்மையில் இடம்பெற்ற பரீட்சை வினாக்களை ஒத்த மாதிரி வினாக்கள் கலந்துரையாடப்படும்
SLAS, SLEAS, SLPS, SLACS, SLFS, SLSS
போட்டிப் பரீட்சைக்கான நுண்ணறிவு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
T.P:0774696695,0761661986

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**
மிக குறைந்த கட்டணத்தில் UK 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம் நெற்
321 K.K.S.Road, Jaffna. 077 755 4528
(CS 930) (3.6)

**வாகனம் விற்பனைக்கு**
- மிகவும் நல்ல நிலையில் உள்ள one owner Toyota Lite ACE CM 35,58 - XXXX ரக வாகனம் விற்பனைக்கு உண்டு.
- Honda Activa one owner மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை)

(cs. 42052) (2.6)
070 186 4077, 076 855 4077

# பான்சி & கொட்டன் புடவைகள் மலிவு விற்பனை



## யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக

ரூ.3000/- முதல் 10,000/- வரை விற்பனை செய்யக்கூடிய

**ரூ.1000/- மட்டுமே**

இறுதி 4 நாட்களுக்கு மட்டுமே
இன்று 07, 08, 09 மற்றும் 10.01.2022
காலை 9.00 முதல் இரவு 8.00 மணி வரை

with NEW STOCK

**இடம்: நல்லூர் மயிலூரன் அரங்கம் திருமண மண்டபம்**
590/5, பருத்தித்துறை வீதி, நல்லூர் (நல்லூர் கோவில் முன்பாக), யாழ்ப்பாணம்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக எமது புடவைக் காட்சியறைகள் மூடப்படுவதால்

**சமநிலையான 90% விலைக் கழிவுடன்**

யாழ்ப்பாணத்துப் பெண்களே நீங்கள் இதுவரை கண்டிராத புத்தம் புதிய டிசைனர் புடவைகள்

- பெங்களூர் டிசைனர் சேலை, .... Rs. 1000/-
- மணிப்பூர் கோட்டா, செக் சேலை,.... Rs. 1000/-
- ப்யூர் ஷி/பான் டிசைனர் சேலை..... Rs. 1000/-
- தானி ஷி/பான் டிசைனர் சேலை,.....Rs. 1000/-
- பாந்தனி பிரிண்ட் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பேப்பர் சில்க் டிசைனர் சேலை, .... Rs. 1000/-
- 90 கிராம் டிசைனர் சேலை, ....... Rs. 1000/-
- மைசூர் டிசைனர் சேலை, ....... Rs. 1000/-
- பனாரசி பார்ட்டிவேர் டிசைனர் சேலை,.. Rs. 1000/-
- பேன்சி பார்ட்டிவேர் சேலை............ Rs. 1000/-
- டிஷ்யூ டிசைனர் சேலை,.............. Rs. 1000/-
- இத்தாலியன் க்ரேப் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பெல்காம் டிசைனர் சேலை,............. Rs. 1000/-
- காஷ்மீரி டிசைனர் சேலை ............ Rs. 1000/-

மறவாதீர்கள் எங்களிடம் எந்த சேலை எடுத்தாலும் ஒரே விலை

**ரூ. 1000/- மட்டுமே**

WANTED SALES GIRLS | ☎ 0766-427996 | ENTRY FREE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org